Reg. No. M. 1725

# செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு


| சிலம்பு ௩ | குரோதன ஆடி ௴ | பால் ௭ |
|---|---|---|


உள்ளுறை


| | |
|---|---|
| இறையனார் அகப்பொருள் | உ௮௧ |
| அகம் புறம் | உ௮௪ |
| ஒரு குறளுண்மை விளக்கம் | உ௮௯ |
| 'ஆலவா யருளாடல்' | உ௯௭ |
| திருப்பாசுரம் | ௩௦௧ |
| தமிழ் மொழி யாக்கம் | ௩௦௯ |
| புறநானூறும் தமிழர் மாண்பும் | ௩௧௧ |
| பழந்தமிழ் | ௩௨௰ |
| வாழ்த்துப்பாக்கள் | ௩௨௩ |
| திருநெல்வேலி ஜில்லாச் சிவாலய சாத்திர பாடசாலை தாபனம் | ௩௨௫ |
| தென்னிந்திய தமிழ்ச்சங்கம் | ௩௨௬ |
| மதிப்புரை | ௩௨௮ |


The South India Saiva Siddhanta Works
Publishing Society, Tinnevelly, Ltd.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 3. தனிப்பால் அணா ௫.

*(All Rights Reserved)*

## 'செந்தமிழ்ச் செல்வி' இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

**(Editorial Board Members)**

தலைவர் :

1. திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், M.A., M.L.
அட்வகேட், நியாயகலாசாலைப் பேராசிரியர், சென்னை.

---

2 ,, ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள், B.A., L.T.
பாடசாலை டெப்டி இன்ஸ்பெக்டர்,
சைதாப்பேட்டை பிரிவு.

3. ,, ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், ஹீபர் கலாசாலை,
திருச்சிராப்பள்ளி.

4. ,, துடிசைக்கிழார் அ. சிதம்பரனாரவர்கள்,
போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், ஹாரூர்,
சேலம்.

5. ,, M. V. நெல்லையப்ப பிள்ளையவர்கள், B.A.
பென்ஷன் தாசில்தார், சிந்துபூந்துறை.

6. ,, வித்வான் மு. கதிரேசச் செட்டியாரவர்கள்,
மகிபாலன்பட்டி.

7. ,, T. S. கந்தசாமி முதலியாரவர்கள், B. A.,
வக்கீல், சாத்தூர்.

8. ,, ஆ. கார்மேகக் கோனாரவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

---

## கையொப்ப விபரம்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| இந்தியா, இலங்கை, பர்மா முதலிய உள்நாடுகளுக்கு ஆண்டுக் கையொப்பம் | | 3 | 0 |
| கழகப் பங்காளிகளுக்கும், மாணவர்களுக்கும் | ,, | 2 | 8 |
| வெளிநாடுகளுக்கு | ,, | 3 | 8 |

மாதிரிப் பிரதி விலை 4 அணா

குறிப்பு:—பினாங், சிங்கப்பூர் தவிர பிற வெளிநாடுகளி லுள்ளவர்கள் முன்பண மனுப்பியே பத்திரிகையினைப் பெற்றுக் கொள்ளல்வேண்டும்.

பத்திரிகை வேண்டுவோரும், விளம்பரங்கொடுக்க விரும்புவோரும் அடியிற்காணும் விலாசத்திற்கு எழுதுக.

---

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
சென்னை & திருநெல்வேலி

ஓம்

திருச்சிற்றம்பலம்

# செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்
திங்கள்தோறும் வெளிவருவது

| | | |
|---|---|---|
| சிலம்பு ௩ | மெய்கண்டான் ஆண்டு-௭௱௨ ஆடித் திங்கள்<br>1925௵ ஜூலை௴—ஆகஸ்டு௴ | பரல் ௭ |

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

---

## இறையனார் அகப்பொருள்

[கா. சுப்பிரமணிய பிள்ளை, M.A., M.L.]

(முன் ௨௪௧-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்திணை பொழுக்கத்துள் அன்பினைச் சிறப்பாகக் கொண்டொழுகும் ஒழுக்கம் களவென்று தொகுத்துச் சுட்டிய ஆசிரியர் அதன் இலக்கணத்தைத் தெளிவுபட இந்நூலின் இரண்டாவது சூத்திரத்திற் கூறுகின்றார். சுருங்கிய சொற்களால்,மிகுந்த பொருளை அமைத்தலில் இவ்வாசிரியர் மிக்க திறமை வாய்ந்தவ

றென்பது இச்சூத்திரவுரையாலே யாவர்க்கும் அங்கை நெல்லி போல் விளங்கற் பாலது. இச்சூத்திரத்தில் களவிற் கிலக்கணங் கூறுதலால் களவொழுக்கம் கந்தருவ வழக்கத்தின் வேறுபட்ட தென்பது ஊகிக்கப்படும். 'தானே அவளே' என்ற சொற்றொ டராலே 'தானே அவள் அவளே தான்' என்னுங் கருத்தைச் சுருக்கமாக அமைத்தமை காண்க. இருவரும் அன்பினானும் பண் பினானும் உருவினானுந் திருவினானுங் கல்வியினானும் ஒத்த சிறப் புடையவர் என்பது இச் சொற்றொடரின் பொருள். இருவரும் ஒத்த உணர்ச்சியினராய் இரண்டுடற்கு ஓருயிர் போலவும் இரு தலையுடைய ஒரு புட்போலவும் வேறுபாடின்றித் திகழ்தற்குக் காரணமாகிய ஒத்த தன்மைகள் வேண்டுமென்பது பெறப்பட் டது.

இனி, உரையாசிரியர் கூறும் வண்ணம் ஆண்மக்களுள் ஒப் பற்ற உயர் குணங்கள் தலைவனுக்கும், அவ்வாறே பெண்டிருள் ஒப்பற்ற உயர் குணங்கள் தலைவிக்கும் அமைதலைக் குறித்தற் காகப் பிரிநிலை ஏகாரம் எழுந்ததென்று கொள்ளின், சிறந்த எடுத்துக்காட்டாய் உலக வழக்கிற் பெரிது மில்லாத ஒரு தனி ஒழுக்கத்தை முன்மாதிரியாக இவண் சுட்டக் கருதினார் ஆசிரி யர் என்ற கொள்கை நிலைபெறும். அது களவியலென்ற சொற் றொடர்க்கு உரையாசிரியர் கூறிய பொருளிற்குப் பொருத்தமாக 'தானே அவளே' என்ற சொற்றொடர்க்கும் பொருள் கொண்ட தாக முடியும்.

'தமியர்' என்ற சொல்லிற்கு உரையாசிரியர் கொண்ட பொருளே 'தானே அவளே' என்பதற்குப் பொருளாகக் கொள் ளுதல் உலக வழக்கிற்குப் பொருத்தமாகத் தோன்றுகின்றது. தமியர் என்பதற்குத் 'தம்முணர்வினரன்றி' என்ற பொருள் கொள்ளப்பட்டது. தலைவனும் தலைவியும் ஒருவரை யொருவர் காணு முன்னமே தத்தம் தனியியல்பிழந்து தம்முள் வேற்றுமை யின்மை யுணர்தற்குக் காரணமாகிய உழுவலன்பு உடையவர் என்பது இச் சொற்றொடரால் சுட்டப்பட்டது. எப்பொழுது அவரது உணர்வின் இழப்பு நேருமென்பதைப்பற்றி உரையாசி ரியர் மிக நுட்பமாகவும் மிகவிரிவாகவும் ஆராய்ச்சி செய்து

உணர்வு கெடுதலும் காட்சியும் உடன் நிகழுமென்பதைத் தெளிவாக நிறுவியுள்ளார்.

'தமியர்' என்ற சொல்லிற்குத் தலைவனும் தலைவியும் பாங்கன் பாங்கிகளின் நீங்கித் தனியாய நிலையினராய் என்று பொருள் கோடலே தெளிவான உரையாகத் தெரிகின்றது. களவு கந்தருவ வழக்கம்போல்வதென்று முன்னே கூறியிருப்பினும் அக்கூற்று தொகுத்துக் கூறியதாகுமேயன்றி வகுத்துக் காட்டியதாகாது. உரையாசிரியர் கூறிய பொருள் அவர் இந் நூலினது இயல்பைப்பற்றிக் கொண்ட கொள்கைக்கு இணக்கமாயுள்ளது. அது உள நூல் வல்லார்க்கு மிக்க இனிமை பயப்பது. நல்லறிவும் நல்லொழுக்கமும் நிலை பெறுவதற்குரிய குணங்கள் மறைவு பட்டு நிற்பதையே உணர்விழத்தல் என்றனர். நன்று இது தீது இது என அறிதலும் உண்மை தெளிதலும் ஒழுக்கங் காத்தலும் நற்கொள்கை மறவாமையும் ஆடவர்க்குச் சிறந்த குணங்களாகக் கூறப்படும். இவை மறைந்தவிடத்து மக்கட்குரிய சிறப்புணர்ச்சி இல்லையென்று கொள்ளப்படும். இவை மறைந்த நிலையில் உயிரைப் பற்றிநின்றது வேட்கை ஒன்றுமே யாகும். அவ்வேட்கை உயிரின் ஒரு சார் நிலையாதலால் அதனினின்றும் அதனை வேறு பிரித்திலர். ஆதலின் வேட்கை மாத்திரம் உடைய உயிரைத் தனியாய் நிற்பதாக உரையாசிரியர் குறித்தனர். இவ்வாறே நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்ற நால்வகைப் பண்பு மிழந்து வேட்கை மீதூரப் பட்ட தலைமகளையும் தனியாய் நின்றதாகக் கூறுதல் உரையாசிரியர் கருத்தாகும். இனி, செயற்கையால் வருகின்ற குணங்கள் யாவும் மறைந்தொழிய இயற்கையன்பு மாத்திரம் மிக்குத் திகழ்ந்து நின்ற நிலையைத் 'தனிமை' யென்பதும் பொருத்தமுடையதே. தமியர் என்பதற்குப் பொதுப் பொருள் கொள்வோர் 'தானே அவளே' என்ற சொற்றொடரால் இக்கருத்துக்கள் யாவும் விளங்குவதாகக் கருதுவர்.

இச் சொற்றொடர்களாலே இருதலையும் ஒத்த அன்பு கூறப்பட்டிருப்பினும் புணர்ச்சிக்கு முன்னும் பின்னும் அன்பு ஒத்தி

ருத்தல் வேண்டுமென்பார் 'காமம்' என்ற சொல்லை அமைத்த னர். முன்னும் பின்னும் எவ்வாறு அன்பு ஒத்திருக்குமென் பதை உரையாசிரியர் தமது செவ்விய ஆராய்ச்சி முறையால் இனிது விளக்குகின்றார். புணர்ச்சிக்கு முன்னுள்ள வேட்கை புணர்ச்சியாற் குறைவுபட்டவிடத்து முன்னின்ற அன்பு குறைவு படாமல் நிறைவுறுதற்குக் காரணம் குணவுணர்ச்சியேயாம். புணர்ச்சி மகிழ்தற் கேதுவாகிய நன்றியறிவும் அன்பு ஈரிடத் தும் ஒத்திருத்தற்குக் காரணமாகும். புணர்ச்சிக்கு முன் காட்சி யின் கண்ணும் புணர்ச்சிக்குப் பின் பிறர் காணுமற் பிரிவுற்ற விடத்தும் வேட்கை ஒத்திருத்தலையும் இருவயினொத்தல் என் பதாற் பெறப்படும்.

இந்நூல் தொகை நூலாதலின் காட்சி, ஐயம், துணிபு, நயப்பு, பிரிவு என்னுந் துறைகளை ஆசிரியர் வகைத்தாற் பெற வைத்தனர். அவை பின் விரிக்கப்படும்.

(தொடரும்)

---

# அகம் புறம்

[வேலூர் சு. ப. சந்தோஷம், B.A., L.T.]

அகம் புறமென்பன உள் வெளி என்றவற்றுடன் ஒரு பொருளன. உள் என்பது மக்கள் உளத்தையும் புறம் என்பது அதற்கு அயலவென்று கருதப்படும் மரம், விலங்கு, மலை, கடல் காற்று முதலியவற்றையுங் குறிப்பதாகக் கொண்டவற்றைப்பற் றிச் சிறிது சொல்ல வெழுந்த திவ்வுரை. அகமும் புறமும் ஒன்றையொன்று தழுவியே நிற்பனவாதலின் அவற்றை முரண் படுவனவாகப் பிரித்தல் தவறு. அவ்வாறு பிரித்துக் கருதிய தனாலன்றோ நம் நாட்டில் புறப்பொருளறிவு குன்றி இப்போது நாம் பெரிது மிடர்ப்படநேர்ந்தது. தன்னையறியாதவன் பிறரை யறியான்; பிறரையறியாதவன் தன்னையறியான். இங்ஙனமே அகத்தைக்கொண்டு புறமறியப்படும்; புறத்தைக்கொண்டு அக

மறியப்படும். 'கதிரவன் சினந்தான்' 'காடு களித்தது' என்று பேசுங்கால் உளத்தின் தன்மை புறப்பொருள்களின்மே லேற்றப்பட்டது. 'கல்நெஞ்சன்', 'அகமலர்ச்சி' என்பவற்றில் புறப்பொருள்களின் தன்மை உளத்தின்மேலேற்றப்பட்டது. அகந் தூய்மைபெறும் நிலையைக் காட்டுவதற்கும் புறப்பொருள்கள் வேண்டும். படலம் நீங்கின கண்ணை 'அழுக்கு நீங்கிய உயிருக் கொப்பிடுதல் வழக்கம். 'அழுக்கு நீங்கிய உயிர்' எனும் போதே அதில் புறப்பொருட்டன்மை கலந்தது. உயர்வு, தாழ்வு, மேன்மை, கீழ்மை என்ற பண்புப் பெயர்களும் நிலத்திலுள்ள மேடு பள்ள ஏற்றத்தாழ்ச்சிகளினின்றும் பெறப்பட்டது வெளிப்படை. ஆதலின் புறப்பொருள்களை புறக்கணித் தகற்றல் கூடாது. அங்ஙனஞ் செய்தல் தமிழர் தன்மைக்கு ஒவ்வாது. தொல்காப்பியமாகிய பெருநூலில் பொருட்பால், அகத்திணை, புறத்திணை என விரண்டாகப் பிரிக்கப்பட்டு ஒன்றையொன்று பற்றிநிற்றல் கருதத் தக்கது அகத்திணை கூறவந்த பண்டைத் தமிழ் நூல்களும் புறப்பொருளை மிக விரித்துக் கூறும். பட்டினப்பாலை முழுவதூஉம் முன்னூற்றோரடிகளானமைக்கப் பட்டிருக்கின்றது. இவற்றுள் இருநூற்றுத் தொண்ணூற்தேழடிகளிற் புறப்பொருள் விரிவும் ஏனை நான்கடிகளில் மாத்திரம் அகப்பொருட் சுருக்கமும் சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்வாறே திருமுருகாற்றுப்படை முதலிய செய்யுட்களினும் புறப்பொருட் சிறப்பே பெரும்பான்மையாற் கூறிவைத்து ஏனைய அகவுணர்வின் றிறனெல்லாம் மிகச் சுருங்கவே சொல்லப்பட்டன. புறத்தே விரிந்த அறிவெல்லாம் முறைமுறையே சுருக்கப்பட்டு அகத்தே செல்வுழி அஃதொன்றில் மாத்திரமே உறைந்து நிற்றலிற் புறப்பொருள் வழிவைத்து விளக்கப்படு மகப்பொருளெல்லாம் மிகச் சுருக்கிக் கூறுதலே மனவியற்கைக்கு இயைந்ததாம் என்று மறைமலையடிகள் தமது பட்டினப்பாலை ஆராய்ச்சியுரையிற் கூறியது காணத்தக்கது.

புறமென்பது வெளியிலுள்ள வனைத்தையுங் குறிப்பது கொண்டு தொல்லைத் தமிழர் நிலத்தையு மதிலுள்ள மரம் விலங்கு புள் முதலியவற்றையும் ஐம்பெருங் கூறுக்கி அவற்றி

னியல்பையும் விளக்கினர். மலையும் மலை சார்ந்த இடமும், காடும் காடு சார்ந்த இடமும், வயலும் வயல் சார்ந்த இடமும், கடலும் கடல் சார்ந்த இடமும், சுரமு மதைச் சார்ந்த விடமும் எனப் பகுத்துக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை யென முறையே பெயரிட்டனர். இங்ஙனம் வகைப்படுத்திய நிலங் களைப் பண்டைத்தமிழர் உளத்திலெழுஞ் சில வுணர்ச்சிகளுக் கிடமாக்கியது அவர் நுண்ணிய அறிவினைத் தெள்ளிதிற் புலப் படுத்தும். இதைச் சற்றுநோக்குவோம். அகவுணர்வால் புறப் பொருள் மாறித் தோன்றுவதும், புறப் பொருட்டன்மையால் அகவுணர்ச்சி வேறுபடுவதும் கற்றுணர்ந்தோ ரறிந்ததே. ஒருவ னெவ்வளவு அழுக்குத்தன்மை யுடையவனாயினும் தூய்மை யான விடத்தில் உமிழத்துணியான். கடும்பசியா லொடுங்கிய வன் இயற்கையில் தானருந்த அஞ்சுவனவற்றையும் உண்ணக் கூசான். ஆற்றில் நீராடிக் கடவுளைத் தொழவேண்டுமென்று துணிந்தவன் வைகறையை நோக்கி மகிழுமாறு திருடப் புகுந்த வன் வைகறையை எதிர் பார்ப்பானோ? மக்களுந் தானும் மாள வேண்டுமென்ற துணிபுடன் சென்ற நல்ல தங்கைக்குத் தோன் றிய கிணறு, புதிதாய் மணம் நிகழ்ந்து தோழியர் பலருடன் நீரெடுக்கச் செல்லுமொரு மங்கை காணுங் கிணறுபோலிருக்கு மோ?

உளத்திலுள்ள உணர்ச்சிக்கேற்ப வெளிப்பொருள்கள் மாறித்தோன்றும். கணவனுள்ளவரையில் மிகுதியும் போற்றி வளர்க்கப்பட்டவுடல், அவன் போனபின் கற்புடைய மனைவிக்கு மிக்க அருவருப்பாதல் கேட்டிலர் யார்? நாளெல்லாம் உழைத்து இளைத்த நன்மகன், ஞாயிறு மேற்கடல் செல்வதைக் கண் ணுற்று அகமகிழ்ந்து மனைவி மக்களைக் காண வீடு செல்லுமாறு கொடும் பிணியால் வருந்து மொருவன் வெய்யவனின் செவ் வொளியைக் காண்பனோ? இனி, புறப்பொருள் அகவியற்கை யைமாற்றுவதற் கெடுத்துக் காட்டாகச் சில காண்பாம். ஓங்கி வளர்ந்த மலைப்புறத்துத் தனியே திரியுமொருவன தெண்ணங் கள் பலர் சூழ மாளிகை யொன்றிலமர்ந்திருக்கும் முதலாளியின் நினைவுகளை யொத்திரா வென்பது திண்ணம். கடல் கொந்தளித்

தாட புலி போற் சீறும் அலைமேற் படகை விரைந்து செலுத்தும் பாதவனது உளநிலை, சிறு குளத்தில் உடை தோய்த்து நிற்கும் மருதநில மகனது அகப்பான்மையை ஒக்குமோ? செவிடு படும்படிப் பலவகை ஓசைகளெழுமிடத்தி லமர்ந்தவன் அகவமைதி பெற்றிருத்தலரிது. இயற்கையி லவனெத்துணையமைதி வாய்ந்தவனாயினும், இன்னாவொலி இடைவிடா தவன் காதில் நுழைந்தால் சீற்றங்கொள்வா னென்பதி லையமில்லை. யாதானுமொன்றுபற்றிச் சினந்தவன் வெளியிலுள்ள பொருட்களில் தன் சீற்றத்திற்குத் துணையானவற்றைக் காண்கின்றானேயன்றி அதைத் தணித்தற்குரியவற்றைப் பாரான். தன் மனைவிமேல் வெறுப்படைந்தவன் அவள் செய்கையிலும் பேச்சிலும் தகாதனவே காண்பான்; தக்கவை அவன் கண்ணிற்கு மறையும். "மருண்டவன் கண்ணிற்கு இருண்டதெல்லாம் பேய்" என்பது பழமொழியன்றோ? முற்றத்துறந்த முனிவர்கள் ஒருகால் அகத்தையும் புறத்தையும் பிரித்து ஒன்றிலொன்று செல்லாமற் காத்தல் கூடும். அத்தகைய பெரியோர் நம் அகவமைதி பெறும் பொருட்டுப் புறவமைதி நிறைந்த காடு மலை குகைகளை நாடிச்செல்வர்.

வெங்கதிர் மிகவும் வீசுந் தமிழ் நிலத்தை யொத்த நாடுகளில் வெம்மையால் மக்களுக்குப் பெரிதும் வருத்தம் நேர்கின்றமையால் வெப்பத்தை யவர் விரும்பார். காலை ஞாயிறு கடுங்கதிர் பரப்பி யாவையும் வாட்டு நம் நாட்டிற் பெரும்பாலும் நெருப்பினன்மை வெறுப்பையே தரும். ஆதலின் வெப்பத்தோடு தொடர்புடைய தமிழ்ச்சொற்கள் பலவும் இன்னாப் பொருளையே குறிக்கும். சுடு, கொளுந்து, வாட்டு, பொங்கு, காய், வெம்பு, எரி, புழுங்கு, வேதல், கொதித்தல், மூள்தல், புகைதல், வெயில், தீ, அனல், கனல், தழல், அழல் என்பவற்றை யாராய்வதா லது நன்கறியபட்டும்.

"என்பிலதனை வெயில் போலக் காயுமே
அன்பி லதனை யறம்" (குறள்; அன்பு, எ,)

ஆகலின் உளம் நொந்து வாடும் நிலையை வெப்பத்தோடு புணர்த்திக் கூறுவது தமிழ் நிலத்திற்கு மிகவும் பொருத்தமானது.

இதுபற்றி யன்றே, காதலனுங் காதலியும் ஒருவரை யொருவர் பிரிந்து புண்படுவதைத் தீப்போலுங் கொடிய சுரமாகிய நிலத்துடனும் முதுவேனிலாகிய பெரும்பொழுதுடனும் நண்பகலாகிய சிறுபொழுதுடனும் பண்டைப் புலவர் சேர்த்தமைத்தார். தலைவனைப் பிரிந்த தலைவியின் உளம் அன்பெனும் ஈரஞ்சற்று மிலாது காய்ந்து, உலைவிலாதுந் துருத்திபோ லவள் நெட்டுயிர்த்து, உள்வெதும்பிக் கலங்கித் தனிமையுற்ற நிலைமையை உள்ளவா றுரைப்பதற்கு, 'நிழலும் நீருமில்லாத அழல் வெங் கானமும்," அடிகொப்புளிக்க நிலஞ் சுடுங் கோடையும் காங்கை தாங்குதற்கரிய நண்பகலும் ஒன்று கூடின.

"அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர்
வருவர்கொல் வயங்கிழாய் வலிப்பல் யான்கேளினி;
அடிதாங்கு மளவின்றி யழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழாய் காடென்றா ரக்காட்டுட்
டுடியடிக் கயந்தலை கலங்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே;
இன்பத்தி னிகந்தொரீஇ யிலைதீந்த வுலவையாற்
றுன்புறூஉந் தகையவே காடென்றா ரக்காட்டு
ளன்புகொண் மடப்பெடை யசைஇய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் புறவெனவு முரைத்தனரே;
கன்மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலாற்
றுன்னரூஉந் தகையவே காடென்றா ரக்காட்டு
ளின்னிழ லின்மையான் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்குங் கலையெனவு முரைத்தனரே
எனவாங்கு,
இனை நலமுடைய கானஞ் சென்றோர்
புனை நலம் வாட்டுந ரல்லர் மனைவயிற்
பல்லியும் பாங்கொத் திசைத்தன
நல்லெழி லுண்கணு மாடுமா லிடனே." (பாலைக்கலி; ௰௧.)

இப்பாலைக்கலி, அகத்திற்றோன்றிய பிரிவாற்றாமையெனு முணர்ச்சியை பெரிதும் பெருக்குதற்குரிய வெளிப் பொருட் சேர்க்கையுடன் அமைக்கப் பெற்றிருத்தல் காண்க

"கோவலன் பிரியக் கொடுந்துய ரெய்திய
மாமலர் நெடுங்கண் மாதவி போன்றிவ்
வருந்திறல் வேனிற் கலர்களைந் துடனே
வருந்தினை போலுநீ"

(சிலம்பு - புறஞ்சேரி ; வரி ; சஅ - ௩௧)

என்பதையு நோக்குக. இங்ஙன மகத்தையும் புறத்தையுமொன்ற வைத்தல் தமிழ் மரபு. இது பிறநாட்டார் நூல்களிற் காணக் கூடிய தொன்றன்று பட்டினப்பாலையில் இருநூற்றுப் பதினெட் டடிகள் காவிரியையும் மருத நிலத்தையும் செம்படவர் சேரி யையும் கடலையு நகரையும் பற்றிக் கூறுவனவாதலால் பாலை யெனு மகத்திணைக் கது ஒக்குமோ வெனின், இங்குப் பிரிதல் நிகழாமையின் அது குற்றமன் றென்பதையும், பின்வரு மடிக ளில் மருதநிலம் பாழாகி நீரற்றுப் போய், மன்றங்களழிந்து நரிகள் ஊளையிடு மிடமாவதைக் குறித்துக் கூறப்படுவதால், பாலைத்திணையின் தன்மை ஒருவாறு காட்டப்பட்ட தென்பதை யுங் கருதவேண்டும்.

(தொடரும்)

---

# ஒரு குறளுண்மை விளக்கம்

[ஜலகண்டபுரம், அ. வரதநஞ்சைய பிள்ளை]

அடியில் வரும் திருக்குறளை ஊன்றிப் படித்துப் பல்காற் சிந்தித்த காலையில் என் சிற்றறிவிற்குத் தட்டுப்பட்ட சில உண் மைகளை ஈண்டுத் தருகின்றேன்.

"வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில." (திருக்குறள் ௧ - ௪)

இதற்குப் பரிமேலழகர் எழுதிய பொழிப்புரை:—"ஒரு பொருளையும் விழைதலும் வெறுத்தலு மில்லாதவ னடியைச் சேர்ந்தோர்க்கு எக்காலத்தும் பிறவித் துன்பங்களுளவாகா" என்பதாம்.

கடவுள் வாழ்த்துக் கூறும் முதலதிகாரத்து நான்காஞ் செய்யுளிதுவாகலின், மேற்போந்த மூன்று குறட்களோ டிதற் குளதாம் இயைபை, முதற்கட் கூறுதும். யாண்டும் காரண மின்றிக் காரியம் நிகழாமையின், காணப்படும் புகையைக் கொண்டு காணப்படாத நெருப்பை யுண்டெனத் துணிதல் போலக், காணப்படும் (சடப்பொருட்களாம்) பிரபஞ்சத்தை நோக்கி இதனை ஆக்குவானொரு தனிமுதற்பொருள் உண்டெ னக் கொள்ளும் கருதலளவை முற்றிலும் பொருந்துமென்றும், எல்லா வெழுத்துக்களும் வாய்திறந்தே யோதப் பெறுதலின், வாய்திறந்த மாத்திரையே இயல்பாயெழும் அகர வுயிரோடு அவ்வெல்லா அக்கரங்களும் கலப்புற்றிருக்குமாறே இறைவனே இவ்வெல்லாவுலகும் கலந்து நிற்கின்றனவென்றும், கருதல், உவ மம் என்னும் இரண்டளவைகளால் கடவுளுண்மையையும், வியாபகத்தையும், "அகர முதல" என்னும் முதற் குறளால் மொழிந்து வலிப்புறுத்துப், பின்னர் "கற்றதனாலாய" என்னும் இரண்டாங் குறளால், மேலுணர்த்தப்பட்ட கருதல், உவமை அளவைகளும் போலியல்ல. அக்கடவுளின் அருளைப்பெற்றுத் துய்த்த சுவாநுபூதிமான்கள் தம் அநுபவங்களை மற்றையோர் பொருட்டு அருளிச்செய்தனவாகிய உரையளவைகளும் ஒத்த லின் இதிற் சிறிதும் ஐயுற வேண்டா என நிலைநாட்டி, அவ் வாகம வறிவின் பெரும்பயன் அக்கடவுளை மனமொழி மெய்க ளான் வழிபடுதலேயாம். அது செய்யாவழிக் கல்வியறிவாற் போந்த பயன் ஒரு சிறுதும் இல்லையென்றியம்பி, "மலர்மிசை" என்னும் மூன்றாங் குறளில், முற்கூறியவாறு இறைவனை வழிபடு வோருள்ளத்து அவன் மகிழ்ந்து மெல்கி அருள்வடிவோ டமர்ந்து விளங்குதலையும் என்றும் அழியா வின்பங் கைவருதலைப் பொதுவகையானும் புகன்ற நம் தெய்வப் புலவர்பெருமானார், இந்நான்காங் குறளில், மேலுண்டென நாட்டிய கடவுளின் சிறப்

பியல்புகளையும் வழிபடற்குரிய உயிர்களின் பொது வியல்புகளை யும் பிறவியின் துன்பக் கூறுபாடுகளையும், அத்துன்பங்களின் நீங்கி விடடைவதற்கேற்ற சிறப்பியல்புகளையும், அவற்றைச் சாதித்தற்கேற்ற உபாயங்களையும் அங்கை நெல்லிக்கனியேபோல் நன்கு விளக்கி யுள்ளாராதலின் இக்குறள், முதல் மூன்று குறட் களோடியைபு பெற்று, மேலாம் நிலையாம் நாலாம் நிலையில் வீற் றிருந்து மிளர்வதாயிற்று.

தெய்வத்திருமணங் கமழும் இத்திருக்குறளில் நிறுவப் பெற்ற சொற்றொடர்களாற் பெறும் பொருட்கள் மூன்றுள் ளன. (1) வேண்டுதல் வேண்டாமையிலான். (2) அடிசேர் வார். (3) இடும்பை. இவற்றாற் போதருவன:—வேண்டுதல், வேண்டாமை யென்னும் இரண்டு தன்மைகளுமற்ற கடவுள் ஒருவர் உளர். அவரடி சேர்ந்தல்லது உய்யும் வழி பெறாத ஆன் மாக்கள் பல வுள. இறைவனடி சேர்ந்து பெறற்குரிய அழியா வின்பத்தைப் பெற வொட்டாது இடைநின்று தடுத்து, (விருப்பு வெறுப்பு) வேண்டுதல் வேண்டாமைகளைத் தோற்றி, உயிர்கட் குப் பிறவித் துன்பங்களை விளைக்கும் மூலமலமு முண்டு. எனப் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளுண்மை அவற்ற தியல்பு களை முறைப்பட வகுத்தோதிய வாறாம்.

இனி அம் மூத்தொடர்புப் பொருட்களில் முதற்கண் ணின்ற "வேண்டுதல் வேண்டாமையிலான்" என்னும் பொரு ளைப்பற்றிச் சிந்திப்பாம்.

இத் தொடர், கடவுளின் சிறப்பியல்பு கூறி, அதனானே உயிர்களின் இயல்பையும் குறிப்பித்தவாறு. என்னை? "ஒன்று நீயல்லை யன்றி யொன்றில்லை"...............................................

"விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகி" என அவன ருள்பெற்றோரத்துய்த்த அநுபூதிச் செல்வர்கள் அறிவித்தாங்கே, எல்லாப் பொருளொடும் தோய்ந்தும் தோயாது நிற்கும் கடவுட் டன்மை, ஒன்றை வேண்டலும், ஒன்றை வேண்டாமையுமற்ற (விருப்பு வெறுப்பறநின்ற) நன்னிலைமையான் வருவதென

விளக்கி, இவ்விருப்பு வெறுப்புக்கள் காரணமாக எய்தநின்ற இன்பதுன்பங்களை இயல்பின் நீங்கி (அநாதி முத்தனாகி) அழியா இன்பவுருவினனாக விளங்குகின்றனன இறைவன் எனக் குறிப்பித்தலின், "இன்பமும் துன்பமு மில்லானே யுள்ளானே" "குணங்கடா மில்லா இன்பமே" என நம் ஆளுடையஅடிகள் அருளியவற்றையும் நோக்குக. "இலான்" என ஒருமைச் சொல்லானுரைத்தார். அவ்வொரு முதல்வனையன்றி வேறில்லை, உலகினர் வழிபடும் பற்பல கடவுளுமாகின்றான் அவ்வொருவனே எனத் தெருட்டுதற்கு, "யாதொரு தெய்வங்கொண்டீர் அத் தெய்வமாகி யாங்கே - மாதொரு பாகனார் தாம் வருவர்" என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தக் கருத்து மீதேயாம்.

இனி "வேண்டுதல் வேண்டாமையிலான்" கடவுள் எனக் கூறியவாற்றால் அவனடி சேராதார் அவ்விரண்டு முடையராய் யாண்டு மிடும்பையே துய்ப்பாராயினர் என அருத்தாபத்திபோதரும். இக்குறளுரைக் குறிப்பில் பரிமேலழகர், "அடி சேர்ந்தார்க்கு அவ்விரண்டும் (வேண்டுதல் வேண்டாமை, இன்மையின் அவை காரணமாக வரும் மூவகைத் துன்பங்களும் இலவாயின" என்று நுனித்துணர்த்துவதையும் கருதுக. இறைவனது பன்னற்கரிய பல் பெருங்குணங்களுள் ஏனையவற்றை எடுத்தோதாது "வேண்டுதல் வேண்டாமையின்மை" என்னும் ஒன்றை மாத்திரம் விதந்து கூறிய குறிப்பு உயிர்த்தொகுதிகள் இவ் வேண்டுதல் வேண்டாமைகளை இயற்கையே மூலமலச் சார்பால் அடைந்து, அவ்வாற்றான் உள்ளத்தில் விருப்பு வெறுப்புக்களோடு கருமம் புரிந்து அவை காரணமாக வரும் இன்பதுன்பங்களை நுகரப் பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து சுழன்று தடுமாறுவனவாயின என்பதுணர்த்தற்கேயாம். இங்ஙனம் "வேண்டுதல் வேண்டாமையிலான்" என்னும் இச்சிறு சொற்றொடர் இறைவன் சிறப்பியல்புகளை உயிர்களின் இயற்கைத் தன்மையோடொருங்குபதேசித்து மற்றும், இவ்வண்ணம் துக்கக்கடலிற் சுழலும் உயிர்கள் விருப்பு வெறுப்பற்றாலன்றி, மெய்யின்பத்தைத் தலைபடாவாகலின், இறைவனைப்போல அவ்விருப்பு வெறுப்பற நின்றுய்தி பெற முயலவேண்டும் என அடுத்து வரும் "அடி சேர்தல்"

என்னும் பொருண்மைக்குத் தோற்றுவாய் செய்து நின்ற தென்க.

உடலும் உள்ளமும் உலகும் போகமும் ஒருங்கிருக்க, உலகப் பொருட்களில் பற்றுச்செய்யாது நிற்றல் எங்ஙனம் இயலும்? ஈது பொருளில்கூற்றேயாம் எனின், அற்றன்று. மனத்தானினைத்தன்றே உலகப் பொருட்களிற் பற்றுண்டாகின்றது. அம் மனம் என்றும் அழிவற்ற இறைவனையே நாடி நிற்குமேல் அவ்விருப்பு வெறுப்புக்கள் பற்ற வழியின்றிக் கழியும். ஆதலின் இதையன்றிப் பிறிது செயலில்லை யென உணர்ந்துவார் இறைவன் அடிசேர்தல் வேண்டு மென்றனர். இதனானே உயிர்கள் துன்பம் அறவே நீங்கி இன்பம் முழுது மெய்துதற்கேற்ற மார்க்கம் கூறப்பட்டது காண்க. "அடிசேர்தலாவது" இடைவிடாது நினைத்தல்" எனப் பரிமேலழகர் 'மலர் மிசை' என்னும் மூன்றாங் குறளுரைக் குறிப்பில் விளக்கினர். நினைப்பினாலன்றி விடயப்பற்றுக்கள் தோன்றி வலியுறா என்னும் உண்மை, பகவத்கிதையில் "த்யாயதே...ப்ரணஸ்யதி" என வரும் சுலோகத்தால் பரம்பரை அனர்த்த காரணங்களோடு விளக்கப்படுகின்றன. இதன் பொருள்:—"மனிதன், விடயங்களை நினைவு கூர்வதால் கருதப்பட்ட அவ் வெளிப்பொருட்கும், கருதிய அவ்வுட் பொருட் (மனத்துக்) கும் ஓர்வகைத் தொடர்பு முதற்கட்டோன்றி, அதை அடைவேன் என்னும் ஆசையும், அதனை அடைய வொட்டாது தடை செய்யும் காரணங்களின் மேல் வெறுப்பும் உண்டாகி அதினின்று முறையே மோகம், மனவேற்றுமை, அறிவீனம் முதலிய துர்க்குணங்கள் படிப்படியாய் ஒன்றினொன்று தோன்றி மனிதனைக் கெடுக்கத் தலைப்படுகின்றன என்பதாம். நன்கு சிந்திப்போமாயின் மனதின்விடயப் பாய்ச்சலே எல்லாப் பெருங் கேட்டுக்கும் மூலகாரணமென்பது தெற்றென்னும். கேடுகள் முளைக்குந்தானமாகிய இவ்விடய சிந்தனையைக் கெடுப்பதற்கேற்ற வழி அதற்கு மாறாகிய வேறோர் சிந்தனையைச் செய்வதேயாம். யாதொரு நினைப்புமின்றி மனதை நிறுத்தல் கூடாதோ? எனின் ஒருக்காலும் கூடாது. இயற்கையை யாரே தடுப்பவர்? பஞ்சீகரணத்தில் மனம் வாயுவின் கூறாய்த்

தோன்றினதென்பர். வாயு, யாதேனும் ஓர்பொருளைப்பற்றியன்றி நில்லாதவாறே, (காரணத்தின் குணம் காரியத்து மிருக்குமென்னும் நியமப்படி) மனமும் யாதேனுமொன்றை நினையாது சும்மா விருத்தல் இயலாததொன்றே. ஆதலின் இறைவனை நாடி நிற்றலில் மனதை முற்படச் செய்தல்வேண்டும். இஃதொன்றே பிறவித்துன்பத்தை அற மாற்றி அழியா இன்பத்தாழ்த்தும் பெருஞ்சாதன மாகின்றது. இவ்வுண்மையை,

> "சிந்தனை நின்றனக் காக்கி நாயினேன்றன்
> கண்ணிணை நின்திருப்பாதப் போதுக் காக்கி
> வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
> மணிவார்த்தைக் காக்கியைம் புலன்க ளார
> வந்தெனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
> மாலமுதப் பெருங்கடலே! மலையே! யுன்னைத்
> தந்தனை செந் தாமரைக்கா டனைய மேனித்
> தனிச்சுடரே! யிரண்டுமிலித் தமிய னேற்கே"

என மணிவாசகப் பெருமானும்,

> "நெஞ்சம் உமக்கே யிடமாக வைத்தேன்
> நினையாதொரு போதுமிருந் தறியேன்"

என வாகீசப் பெருந்தகையாரும் கூறித் தாம் ஒழுகிய நன்னெறியைப் பிறரும் அடைந்து பேறெய்தக் கருதிய பெருங்கருணையை வெளியிட்டனர்.

நம் ஞான நூற்களில் எங்கு பார்ப்பினும் பெருவழக்காய்த் தோன்றும் உபதேசம், அவாவறுத்தலே "ஆசையறுமின்கள் ஆசையறுமின்கள், ஈசனோடாயினும் ஆசையறுமின்கள்." "அற்றது பற்றெனில் உற்றது வீடு" "அவாவென்ப எல்லாவுயிர்க்கும் எஞ்ஞான்றும், தவாஅப் பிறப்பீனும் வித்து." "பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்" "ஆசையெனும் பெருங்காற்றூ டிலவம் பஞ்செனவு மனமலையுங் காலம்—மோசம் வரும்" எனப் பெரியோர் பலரும் ஒரே வாக்காய் முழக்குகின்றனர். ஆசையை நீக்குவது எங்ஙனம்? உலகப்பற்றுக்களை

நீக்கியபின் அவ் வாசைக்குப் புகலிடந்தான் எங்கே? எனவினு வுதிரேல், "மற்றுப் பற்றெனக் கின்றி நின்மலர்ப் பாதமே மனம் பாவித்தேன் - பெற்றலும் பிறந்தேனினிப் பிறவாததன்மை வந்தெய்தினேன்" எனச் சைவசமயாசாரியர் அருளியவாறு பரமகருணாநிதியின் பால் அவ்வாசை செல்லப் பயிலல் வேண்டும். மருந்துண்பதே பிணி நீக்கத்திற்கும் தேக சுகத்திற்கும் அமையுமாறே, கடவுள்பாற் பற்றுச் செய்வதே, அப்பற்று முதிர்தற்கேற்ப இப்பொய்யுலகப் பற்று விடற்கும் உதவியாகின்றது. இதனை மிக எளிதாக "பற்றுக பற்றற்றான் பற்றினையப் பற்றைப் - பற்றுக பற்று விடற்கு" என நம் தெய்வப்புலவர் செப்பினர். "வேண்டுதல் வேண்டாமை யிலான்" எனக் கடவுளின் குணநலங்கூறிய இப்பொருளையே ஆன்மாக்களின் திறத்துப் பயனுறச் செய்வாராகி மற்றோரிடத்து "வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை, மற்றது வேண்டாமை வேண்டவரும்" எனச் சொல்லணியும் பொருட்செறிவும்படத் தேவர் மொழிந்துள்ளார். இறைவன்பாற் பற்றுச் சிறிதே செய்யும் ஆற்றலினேம், அதனாற் போதரும் பயன் யாதாகும்? என்று கருதற்க. எத்துணைச் சிறிது பற்று இறைவன்மாட்டுச் செயினும் அதற்கேற்ப வரக்கடவன வாகிய உலகத் துன்பங்கள் நீங்கும் என ஊக்குவார். "யாதனின் யாதனின் நீங்கியான் நோதல் - அதனி னதனின் இலன்" எனவும் கட்டளையிட்டனர்.

இனி ஆசையினால் பிறவித்துயரம் பெறுவதெங்ஙனம்? எனின் விருப்பு வெறுப்புடன் செய்யுங் கருமங்கள் ஆகாமியமெனப்பட்டு முன்னைப் பிறவிகளில் ஈட்டப்பட்டு மேல்வரும் பிறவி நுகர்ச்சிக்கெனத் தொகுத்துள்ள சஞ்சிதத்துடன் கலந்து இவ்வுடலூழ் (பிராரப்தம்) முடிவுற்ற காலையில் பக்குவப்பட்டுப் பயன்தர நின்று இங்ஙனம் பிறவியை மேன்மேலும் விளைத்து வருமென்க. இவ்வாறு விருப்பு வெறுப்புக்கள் மிக ஒவ்வொரு பிறவியிலும் முற்செய்வினையைத் துய்த்துக் கழிப்பதனோடமையாது, மீண்டும் ஆகாமிய வினைகள் ஈட்டப்பட்டுக் குறையாவாய் நிரம்புதலின் பிறவிப் பெருங்கடல் நீந்தப் பெறுமாற்போம். அதற்காகவே இறைவனடி சார்தல் வேண்டும் என்றும், இவ்வுல

தில் ஒருவன் எத்துணை இன்ப நலங்களைப் பெறினும், பெறும் அவையும், பெறுகின்ற தானும், நிலை அழிவுடைப் பொருட்களா தலின் தானுள்ள ஞான்றே அவைகெடினும், அவை யுளதாக வும் தான மரணவாய்ப்படினும் பிற காரணங்களானும் அவ்வப் போழ்து துன்பவுணர்ச்சி தலைப்படா தொழியாமையின் அதற் கேற்ற தன்னிகரில்லா மருந்து, தனக்குவமையில்லாதான் தாள் சேர்தலே யன்றிப் பிறிது கிடையாது என்றும், உள்ளத்தில் பெருங்காதலை மிக எழுப்பும் விஷயப் பற்றுக்களினின்றும் மீட் கும் பெருந்துணை, அறவாழியந்தணன் தாளேயாமென்றும், பல்லாற்றானும் இந் நான்காங் குறளின் நாட்டிய வுண்மையைச் செய்கையில் கொள்ளர்கவெனத் தெருட்டிய நம் உத்தரவேத முடையார், இங்ஙனம் மனத்தால் கருதியதனோ டமையாது வாயார வாழ்த்தியும் தலையாரக் கும்பிட்டும் அவனருள்வழி நிற்றல் வேண்டும் என வுணர்த்துவார், "இருள்சேர்" "பொறி வாயில்" "கோளில் பொறி" என்னும் ஏனை மூன்று திருக்குற ளானும் புகல்வாராயினர்.

உலகப் பொருட்கள் நேரில் காட்சிப்பட்டு எமதறிவைக் கவர்ந்து மனதையீர்த்து இன்பம் வழங்கவல்லன வாகத் தோன்று தலின், அவற்றின்பால் எளிதில் ஈடுபடுகின்றேம்; கடவுட் பொருள் அங்ஙனம் காட்சிக் கிலக்காகாமையின் மனம் செல்லப் பெறுதயர்க்கின்றேம்; என்பிரேல், நாம் இன்பமென விழையும் பொருட்களையும் அவற்றைத் துய்த்தற் கிடமாகிய தனுகரணங்க ளையும் ஒருசேரக் கூட்டித் தந்த தனிப்பெருந் துணைவன் யாவன்? எனச் சிறிது நன்றியறிவுடையீராய்க் கருதுவீராயின் அன்னவனையன்றி மற்றியாரையும் நினைக்கும் கடப்பாடு பெறீர். நம் ஆளுடைய நம்பிகள் - திருமழபாடித் தேவாரத்துள்,

"பொன்னார் மேனியனே புலித்தோலை யரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுண் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே"

என்றருளியவாறே, தோன்றாத்துணையாய்க் கணந்தோறும் நமக் கினியவே செய்து நிற்கும் பேரருளாளனையன்றி யாரை நினை வது?

(தொடரும்)

# 'ஆலவா யருளாடல்'

## கால்மாறி நடித்த காதை

['குறு முடியான்']

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

கண்ணுதற் பெருங் கடவுளும் கழகமோடமர்ந்து பண்ணுறத் தெரிந்தாய்ந்த பாங்குறு தமிழ் மண்டிலம் சேரநாடு, பாண்டிநாடு, சோழநாடு என்ற மூன்று பிரிவுடையது. இதில் மங்கலம்புனை பாண்டி நாடாகிய மகளுக்கு முகமாகச் சொல்லப்படுவது மதுரை. சங்கம் வளர்கூடலென்று சிறப்பித்துச் சொல்லப்படும் இதனைத் தலை நகராகக் கொண்டு பழம்பதியாம் பாண்டி நாட்டை ஆண்டுவந்த அரசர்கள் பாண்டியர்களாவர். இப்பாண்டிய மன்னர்களில் விக்கிரம பாண்டியன் என்பவரொருவர். இவருக்குப் புதல்வராகத் தோன்றியவர் இராசசேகர பாண்டியர்.

இவர், தம்மைப் பெற்று வளர்த்து, உரிய பருவத்தே இம்மைக்கும் மறுமைக்கும் நன்மை புரியும் நற்கலைகளைப் பயிற்றுவித்த தந்தையார் சொல்வழி யொழுகும் தூயதன்மையர். ஆலவாய் அவிர்சடைக் கடவுளிடத்து இடையறா அன்பு செலுத்துபவர். இரு முனிவர் வேண்டுகோட் கிசைந்து, வென்றுளே புலன்களைந்தார் மெய்யுணருள்ளந்தோறும் சென்றுளே அமிர்த மூற்றும் சிவபெருமான் திருநடம்புரி வெள்ளிமன்றுளே சென்று சென்று நடங்கண்டு என்புக நின்றுருகி எழில் கண்டு களிப்பதைப் பொழுது போக்காக உடையவர். அப்பெருமான் ஆடல் புரி அரும் பாதகலை நீங்கலான அறுபான் முக்கலைகளையும் ஆசறக் கற்ற அறிஞர். நிற்க,

இவர் காலத்தே சோணாட்டைப் புரந்து வந்தவர் கரிகாற் சோழனெனும் புரவலர். இவர் எண்ணெண் கலைகளையும் ஐயந்திரிபறப் பயின்றவர். திருவானைக்காவில் எழுந்தருளியிருக்கும்

நன்னுவற் பெருமானை நலமுறப் பணிந்து நாளும் வழிபடுவர். தமிழ் மொழியிடத்தும் தமிழ்ப் புலவரிடத்தும் பேரன்பு வைத்துப் பேணி வருபவர். ஆகவே, தம்மரண்மனையில் அரும்பெரும் புலவர் பலருடன் அளவளாவி மகிழ்ந்திருப்பதே அவர்தம் அறநெறி.

இப்பேரரசர் புலவர்களிலொருவர் பாண்டி நாட்டரசனைப் பார்த்துச் செல்லப் பரிவுற்று அவன் வீற்றிருக்குங் கோயில் முன்றிலை அடுத்தனர். அரண்மனை வாயிற் காப்பாளர் வாயிலாகத் தமது வரவை மன்னற் கறிவித்தனர். மன்னனும் புலவரென்ற அளவில் பேருவகை பூத்துப், போயழைத்திடுமினின்னே, போயழைத்திடுமினின்னே, போயழைத்திடுமினின்னே யென விரைபொருளில் வாயிற் காப்பாளர்க் காணையிட்டனன். அவர்களும் புலவரை யடைந்து ஆணையுணர்த்தி அன்புடன் அழைத்துச் சென்றார்கள். புலவர் வேந்தனை யடுத்ததும் அவரை யன்பொடு பணிந்து, 'அரசே, யான் ஓரிசைப் புலவன். இருப்பது சோணாடு. பிழைப்பது கரிகால் மன்னனகம். எம்பெருமானெழுந்தருளு மின்னிடந்தொறும் எழுச்சியுளத்துடன் சென்று தொழும் வேட்கையன். இலைமுகப்பைம்பூணிறையும் இறையோடொக்குமாதலின் நும்பா லன்பால் வந்தனன்' என்றனன்.

என்றலு மிறைவன், புலவ! என்பால் வந்த நீ வேண்டுவதி யாது. விரைந்து கூறுக: இசைந்து தருவல்: என்றியம்பினன்.

புலவர்—'மாநிலங் காக்குமன்ன! காவலனுவான் கலைகளெட்டெட்டும் கற்றறி புலவனுதலொருதலை. எந்நாட்டு மன்னனே எண்ணெண் கலையு மினிதுணர் புலவன். தாமும் நாலிரட்டியெட்டு நற்கலையும் நன்கறிந்தவரென்றே நம்புகின்றேன்.'

அரசன்—புலவ! உள்ளதை யொளித்தலொவ்வாது. உயிர்களி னுயர்நிலை கருதி உளந்தோறுறைந்துறை யிறைவன் உவகையாடற்கலையாம் பரத நூலொழிந்த பிறவற்றையே பயின்றுள்ளேன்.

புலவர்—வேந்தே! தாங் கூறுவது முற்றும் சரியே. எனினும், பரதக்கலை பயின்றிருந்தாலொழிய பரதநாட்டியம் புரியும் மக்களினுயர்வு தாழ்வுணர்ந்து வரிசை பிசகாது பரிசிலளித்

தல் இயலாதன்றோ? ஆதலின் அது மன்னன் முறைக்குக் குறைவு தருவதாகுமே.

அரசன்—அங்ஙனமாயின் அறிஞ! அக்குறை நீங்குமாறாக வாயினும் அவ்வாடனூலை ஆர்வமுடன் விரைவிற் கற்பல். எங் குறை நீங்கத் துணைபுரிந்த நீவிர் எம்மருமை விளக்கு வரிசைப் பரிசும் அன்புடன்பெற் றின்புற்றேகுவீர்.

புலவரேகியது முதல் தனக்குப் பரதநூற் பயிற்சியின்மைக் குக் கவன்று, இரவு பகலா யிளைத்துப் பின் அமைச்சர் முதலி யோரா லழைத்துவரப்பட்ட பரத நூலாசிரியருடன் அவ்வாடற் கலை பயிலலாயினன். ஆலவாய் அண்ணலருளால் சால வக்கலைத் தேர்ச்சியடைந்தனன். பரத நாட்டியப் புலவர்க்கு, அவரவரு மையறிந்து முன்னினும் பன்மடங்கு பரிசளித்துவந்தனன். எனினும் தான் பயிலும்பொழுது தனக்கேற்பட்ட மெய் வருத் தம் உழைப்பு முதலியவற்றை வெள்ளியம்பலவாணரைக் காணுந் தொறும் உள்ளியுள்ளிப் பெருமூச்செறிவன். வலக்காலையூன்றியே தாண்டவம்புரியும் அம்பலவாணர் நிலையைநோக்கி யக முருகுவன். வலக்கால் நோகுமே யிதனை மாற்றி இடக்காலூன்றி நடம்புரிய வேண்டுவதே முறையெனத் துணிந்தனன். அத்துணிவை நிறை வேற்றச் சிறந்த நாளெதுவெனச் சிந்தித்தனன். உமையம்மை யார் இறைவனை வழிபட்ட இரவாகிய சிவராத்திரியே ஏற்றமுற்ற தென எண்ணினன். அற்றை நாள் ஆலவாய்ப் பெருமாற்கு அழகுற விழா வியற்றி அவ்வழகர் அருளொழுகு நிலை கண்டு சேவித்து அம்பலவாணர் திருமுன் படைந்து உள்ளும் புறமு மொத்த தன்மையுடன் அங்கை கூப்பி அகமிக நைந்து, ‘எம் பெருமானே, நின்ற திருவடியை எடுத்து வீசி, எடுத்த திருவடி யைக் கீழே யூன்றி அடியேன் காணும்படி இன்று மாறியாடித் தமியேனது வருத்த முழுவதையும் தீர்த்தருளும். அங்ஙனஞ் செய்யா தொழிவிரேல் இதோ என் உறையிலுள்ள உடைவா ளுருவி உன் முன்பு நாட்டி உயிரை மாய்த்துக்கொள்வேன்’ என்று கூறி மாளப்புகுந்தனன்.

அன்பன் மாளல் நீக்கி ஆளக்கருதிய அந்நுதற்கட் பெரு மான் ஆடற்கலை யுணரறிஞனுக்கிரங்கித் தமது இடக்காலூன்றி

வலக்கால் எடுத்து வீசிமாறி யாடிக்காட்டினர். காண்டற் கரிய காட்சி கண்ட கன்னி நாடனும், கழிபேருவகைக் கடலுளாழ்ந் தனன். உண்மை யறிவின்ப வெள்ளத்து ளாழ்ந்த இராசசேக ரன் அம்பலவாணரிடத்து ஈடுபட்டுருகி,

பழையாய் புதியாய் சரணம் பணிலக்
குழையாய் சரணம் கொடுவெண் மழுவாள்
உழையாய் சரணம் உருகா தவர்பால்
விழையாய் சரணம் விகிர்தா சரணம்.

இருளாய் வெளியாய் சரணம் எனையும்
பொருளாக நினைந்து புரந்தரன்மால்
தெருளாத நடம் தெரிவித்தெனை யாள்
அருளாய் சரணம் அழகா சரணம்.

என்று போற்றிப் பின்னும் எம்பெருமானே! இருமுனிவர் வேண்டுகோட் கிணங்கித் திருநடம்புரியும் தாம் எளியேனையாட் கொண்டருளும். கால்மாறி யாடியருளிய காட்சியை யென்றும் அன்பர் கண்டின்புறும் வண்ணம் நின்றருளல்வேண்டு மென்று வேண்டியபடியே கால்மாறியாடுந் திருக்கோலத்துடனே இன் றும் நின் றும்பருந் தொழும் அம்பலவாணர் இம்பரை மகிழ் வித்து வருகின்றார்.

பெருமாறிற் கிளர்தடந்தோள் ஒருமாறன் மனங்கிடந்த
புழுக்கம் மாற
வரும்ஆறிற் கண்ணருவி மாறாது களிப்படைய
மண்ணும் விண்ணும்
உருமாறிப் பவக்கடல்வீழ்ந் தூசலெனத் தடுமாறி
உழலும் மாக்கள்
கருமாறிக் கதியடையக் கால்மாறி நடித்தவரைக்
கருத்துள் வைப்பாம்.

என்று மின்பம் பெருகு மியல்பின
லொன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி யுலகெலாம்.

# திருப்பாசுரம்

[வேலூர். C. S. இராஜாப்பிள்ளை]

(முன் ௩௨௨-ம் பக்கத் தொடர்ச்சி)

அரிய காட்சிய ராய்த்தம தங்கைசேர்
எரிய ரேறுகந் தேறுவர் கண்டமுங்
கரியர் காடுறை வாழ்க்கைய ராயினும்
பெரிய ராரறி வாரவர் பெற்றியே.

(இதன் பொருள்) சுட்டி யுணரப்படுந் தன்மையவாய புலனுணர்வுக்கு அரியராகவும், அன்பின் வழிப்பட்டு அவனது திருவருளாற் காண்பார்க்கு எளியராகவும் உள்ளவர். தமது அழகு நிறைந்த கையில் அக்கினியை யுடையவர். இடபத்தின்மீது விரும்பி ஏறுபவர். திருக்கழுத்து ஆலமுண்டதனாற் கருநிறமாகப் பெற்றவர். இடுகாட்டின் வாழ்க்கையுடையவர். ஆயினும் அனைவர்க்கும் பெரியர். அவரது தன்மையை அறிபவர் யார்.

மாயாகாரியமாய்ச் சுட்டி யறியப்படு மியல்பிற்றாய உலகப் பொருள் யாவும், தோற்றம், நிலை, இறுதி என்னும் முத்தொழிலுடையவாகலான், இவை அசத்துப் பொருளாகலின் சத்தாகிய சிவத்தை அறியாவாகலின், இறைவன் இச்சுட்டுப் பொருள்கட்கு அரியன் என்பதுணர்த்த அரிய காட்சியர் என்றார்.

உணரக்கூடாத பொருள் எனின் முயற்கோடு போலச் சூனியமோ எனின் அவ்வாறன்று. அவன் சுட்டுணர் விறந்து நிற்பினும், தவமுதிர்ச்சியாற் பக்குவ முடையராகி இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் எய்தப் பெற்ற ஆன்மாக்கள் "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்னும் மணிவாசகப்பெருமான் திருவாக்கின்வழி அவனருளே கண்ணாகக் காணின் அவர்களது கரவிலாத பேரன்பினுக் கெளிவருங் கருணையுடையான் என்பதுணர்த்துவார் காட்சியர் என்றார்.

எனவே, அரிய காட்சியரென்பது ஒருவாற்றானறியப்படாமையும், ஒருவாற்றா னறியப்படுதலுமாகிய இரண்டு தன்மையு

முடையான் எனும் பொருளுணர்த்தி, இறைவன் சொருப இலக்கணம் விளக்குவதாயிற்று.

மெய்கண்டநாதன் அருளிய "வாக்குமனாதீத கோசரமாய் நின்ற அதுவே சத்தாயுள்ள சிவமென்றுரைப்பாற்று" என்னுந் திருவாக்கும் இக்கருத்தேபற்றிய தென்க.

அரியராகிய அவ்விறையனார் உள்ளன்புடன் காணுமாறு விழைவார்க்கு அங்கை சேரெரியராகவும், ஏறுகந்தேறுவராக வும், கண்டங்கரியராகவும் வெளிவந்தருள்புரியு மியல்பினரென் பது தோன்ற, அங்கை சேரெரியார், ஏறுகந்தேறுவர், கண்ட முங் கரியர் என்றார். மேலும், அங்கைசேர் எரியர், காடுறை வாழ்க்கையர் என்பன அவரே மகாசங்கார கருத்தா வென்பதை யும், ஏறுகந்தேறுவர் என்பது ஏனைய சமயத்தவராற் கடவுள ராகக் கருதப்படுந் தேவர்களும் அந்நிலைமை யடையத் தமது திருவருளே காரணமாகக்கொண்டு வாழ்பவர் என்பதையும், இறைவர் திருவருளே படைப்பாதி ஐந்தொழிற்குங் காரணமா யுளதென்பதையும், கண்டமுங்கரியரென்பது தம்மை வழிபடுந் தொண்டர்களது வினையகலத் தாமே நீறணிவதுபோல, அபய மென்றடைந்த தேவர்கள் ஆலகாலவிடத்தாற்றுயருறுவண்ணம் அதனையுந் தாமே யுண்டு ஆதரித்த பெருங்கருணை வள்ளல் என்பதையும் விளக்குகின்றன. இதுபற்றியே, தொண்டர் சீர் பரவுஞ் சேக்கிழார் பிரானும்

"அரிய காட்சிய ரென்பதவ் வாதியைத்
தெரிய லாநிலை யிற்றெரி யாரென
உரிய வன்பினிற் காண்பவர்க் குண்மையாம்
பெரிய நல்லடை யாளங்கள் பேசினார்"

எனப் பொருளருளிச்செய்தனர்.

சிவபெருமானுக்கு இவை யடையாளங்களெனின்—அடை யாளங்களுடைய எல்லாப் பொருள்களும், கண்டிதப்பொரு ளாகி, அளவையெலாங் கடந்து, மனங்கடந்து, குணங்குறிக ளிகந்து நிற்கும் அப்பெருமானுடைய வியாபகத்திற்கு இழுக்கு

நேருமே! அது நேராது காத்தற்பொருட்டே ஆயினும் பெரியார் என்றார்.

பெரியா ரென்பது "இருநிலனாய்த் தீயாகி நீருமாகி யமானனு பெரியுங் காற்றுமாகி, அருநிலைய திங்களாய் ஞாயிறாகி ஆகாசமா யட்ட மூர்த்தியாகி" எனவும்,

"ஐம்பெரும் பூத மிருசுட ரான்மா வன்றி வேறுலகிலை யவைதாம், உன்பெரு வடிவ மெனப்படும்" எனவும் எழுந்த பெரியார் திருவாக்குகளின்படி இறைவன் அட்டமூர்த்தியாய் நிற்கின்றானெனப்பொருள் தருதலின், தெய்வப்புலவரும்

"ஆயி னும்பெரி யாரவ ரென்பது
மேய விவ்வியல் பேயன்றி விண்முதற்
பாய பூதங்கள் பல்லுயி ரண்டங்கள்
எயும் யாவு மிவன்வடி வென்றதாம்"

எனத் திருவாய்மலர்ந்தனர்.

அட்ட மூர்த்தியாய் நிற்கும் அப்பரசிவப் பெருமான், அரிய காக்ஷியாராயும், அடையாளங்களுடையவராயும், காடுறை வாழ்க்கையாராயும், பெரியராயும் நிற்றலின் அவரதியல்பு இத்துணைத் தென்று துணிந்துசொல்லக் கூடாமையானும், அவரருளிய வேத முதனூல்களே, அவரதியல்பு கூறுமிடங்களில் "பூதங்களல்ல பொறியல்ல வேறு புலனல்ல உள்ளமதியின் பேதங்களல்ல இவையன்றி நின்ற பிறிதல்ல" என அன்மைச் சொற்களாற் றுதிக்கின்றமையானும், "யாரறிவா ரவர் பெற்றியே" எனுந் தமிழ்மறையைக் குன்றைப்பிரான்

'பின்பு மாரறி வாரவர் பெற்றியை
யென்ப தியாருணர் வானுஞ்சென் றெட்டொணு
மன்பெ ருந்தன்மை யாரென வாழ்த்தினர்
அன்புசூழ் சண்பை யாண்டகை யாரவர்'

என விளக்கினர்.

வெந்த சாம்பல் விரையெனப் பூசியே
தந்தை யாரொடு தாயிலர் தம்மையே
சிந்தி யாவெழு வார்வினை தீர்ப்பரால்
எந்தை யாரவ ரெவ்வகை யார்கொலோ'

சிவபெருமானுடைய ரௌத்திரி சத்தியினுல் எல்லாப்பொருள் களும் வெந்து, அதனுல் உண்டாகிய சாம்பலைக் களபமா யணிந்து, தந்தையுந் தாயுமில்லாதவ ராகிநின்ற தம்மை நினைத்து எழுகின்றவருடைய வினைகளைத் தாமே நீக்கியருளு கின்ருர். இவ்வியல்புடைய எமது பரமபிதாவாகிய அவர் எத்தன் மையுடையரோ அறியோம்.

பரசிவப் பெருமானது திருவருளால் மாயையினின்றுங் காரியப்பட்ட உலகம், சர்வசங்காரகாலத்தே முதற்காரணமாகிய மாயையின் ஒடுங்கி அழிய, அந்த மகாசுடுகாட்டிலே வாழ்ந்து அப்பொடியைத் திருமேனியில் அணிந்து, தனக்கு ஆதியும் அந்தமுமில்லாமல் நிற்கின்ருனென்பதை விளக்குகின்ற,

''வெந்தசாம்பல் விரையெனப்பூசி''

என்னும் மறைமொழியைத் தண்டக நாட்டுப் பெரியார்

வெந்த சாம்பல் விரையென் பதுதம
தந்த மில்லொளி யல்லா வொளியெலாம்
வந்து வெந்தற மற்றப் பொடியணி
சந்தமாக் கொண்ட வண்ணமுஞ் சாற்றினர்—என

விரித்தருளினர்.

இனித் "தந்தையாரோடு தாயிலர்'' என்பது தாமே எல்லா வுயிர்கட்குந் தந்தையாகவும் உமையவளே தாயாகவும் நின்று உலகத்தைப் படைத்துக் காத்துப் பராசத்தியிலொடுக்கிக்கொள் ளுதலுடையராகியும், தாம் வேறொருவராற் படைக்கப்படாதவ ராகலிற் பிறப்பிறப்பில்லாதவராயும் நிற்கின்ருரெனப் பொருள் உணர்த்துமாகலின், சேக்கிழார் சுவாமிகளும்,

தமக்குத் தந்தையர் தாயில ரென்பதும்
அமைத்திங் கியாவையு மாங்கவை வீந்தபோ
திமைத்த சோதி யடக்கிப்பின் ஈதலால்
எமக்கு நாதர் பிறப்பில றென்றதாம்—என்றருளினர்.

இனித் "தம்மையே சிந்தியா வெழுவார் வினைதீர்ப்பர்" என்பது பிறப்பில்லாதவராய அப்பெருமான் தம்மை உண்மையறிவானந்த முடையவராகத் தியானிக்கின்றவர்களுக்கு, அவர்களது இருவினையையும், அவ்வினைப்பயனு லெய்தும் சுவர்க்க நரகத்தையும் நீக்கி, இவை யெல்லாவற்றிற்கும் மேற்பட்ட பேரின்ப நிலையை யளிக்குமென்பதுணர்த்தலின், தொண்டை நாட்டு வேளாளர் பெருமானும், இதனை

தம்மையே சிந்தி யாவெனுந் தன்மைதான்
மெய்ம்மை யாகி விளங்கொளி தாமென
இம்மை யேநினை வார்தம் இருவினைப்
பொய்ம்மை வல்லிருள் போக்குவ ரென்றதாம்

என விளக்கினர் என்க.

"எந்தை யாரவ ரெவ்வகை யார்கொலோ" என்பது சிவபெருமான் அருவம், வுருவம், அருவுருவம் என மூவகைப் பட்டு நின்றும், இவற்றின் மேலாகிய சொரூப சிவனுகியும், அட்டமூர்த்தியாகியும், தோற்றநாச மில்லாதவராகியும், முன்னைப்பழம் பொருட்கு முன்னைப்பழம் பொருளாயும், பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனுயும், ஒருவராலும் ஒருவாற்ருனும் துணிந்துரைக்கக் கூடாதவனுகின்ருனெனப் பொருள்படுதலின் பெரியபுரான ஆசிரியரும் இதனை,

எந்தை யாரவ ரெவ்வகை யார்கொலென்
றிந்த வாய்மைமற் றெப்பொருட் கூற்றினும்
முந்தை யோரை யெக்கூற்றின் மொழிவதென்
றந்தண் பூந்தாரப் வேந்த ரருளினர்

என விளக்கினர்.

ஆட்பா லவர்க் கருளும் வண்ணமு மாதிமாண்புங்
கேட்பான் புகிலள வில்லை கிளக்க வேண்டா
கோட்பா லனவும் வினையுங் குறுகாமை யெந்தை
தாட்பால் வணங்கித் தலைநின் றிவைகேட்க தக்கார்

முன்னர்க் கூறப்பட்ட இயல்பினை யுடைய அப்பரசிவன் தனது அடியார்கட்கு அருள்செய்யும் வகையும், அருள்செய்கின்ற அம் முதல்வனது பெருமையும், கேட்கப்புகில் அளவில்லாதனவாம்; ஆகலின் இப்படிப்பட்டதென்று கேட்டல் வேண்டாம். அநுப விக்கத் தக்கனவாகிய பிராரத்தவினையும், இனிவரக்கடவன வாய ஆகாமிய சஞ்சித வினைகளும் குறுகா வண்ணம் எமது பிதாவாகிய அக்கடவுளின் திருவடியை வணங்கி நின்று கேட் பாராக.

(தொடரும்)

---

# தமிழ் மொழி யாக்கம்

## II

[சாத்தூர். T. S. கந்தசாமி முதலியார், B. A.,]

(முன் கக-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் வழங்கும் மொழிகள் எண்ணில. அவைகளின் தன்மையும் பலதிறப்படும். சில பேச்சு வழக்கில் மட்டும் நிற்பன. சில நூல் வழக்கில் மட்டும் உள்ளன. சில இரண்டிலு முயர்ந்து விளங்குவன. வடமொழி நூல்வழக்கு மட்டு முடையது; பேச்சு வழக்கொழிந்து நிற்பது. அஃதென்ஞான்றும் பேசப்பட்டிராத மொழியேயாதல் வேண்டுமெனக் கூறல் தவறாகாது. சில மொழிகள் இருவகை வழக்குமுடையன வெனினும் அவ்விரண்டினுள் ஒன்றிலேனும் சிறப்புடையனவல்ல. சில மொழிகள் அவ்விரண்டினும் சிறந்து விளங்குவனவாம். நூல் வழக்கிற் சிறந்து விளங்கும் மொழிகளுள்ளும் ஆன்றோர் புலனெறி வழக்கிற் சிறந்தனவாய்ச் செம்மொழியாய்த் திகழ்வன மிகச் சிலவேயாம்.

உலகத்து மொழிகள் எண்ணிலவேனும் அவற்றைத் தனிமொழி, வழிமொழி யென்ற இருகூறுட் படுப்பர் மொழிநூல்

வல்லார். தனிமொழி தானே இயங்குந் தன்மையதாய், வேறு மொழிகள்வாய்த் தோன்றாததாய், பிறமொழிகளின் துணையின்றியும் தானே பிறங்கவல்லது. வழிமொழியோ எனின், அது பிறிதோர் மொழியிற்றோன்றி அம்மொழியின் றுணையின்றிச் சிறவாது தன்னை யுயிர்த்த தாய்மொழியின் சீரே தன் சீராகப் பெரும்பாலும் பெற்றுக், காலத்தினாலும், நாட்டியற்கையாலும், மற்றும் பல்வேறு காரணங்களாலும் தாய்மொழியின் வேறாய்ச் சிறிது உருத்திரிந்து, சிலமின்றி தன்னை யுயிர்த்த நற்றாயை மறந்து வேறு மொழியைத் தன் தாயென அது கொள்ளினும், நுண்ணறிவுடையோர் அஃது இதன் வழித்தெனத் திண்ணிதிற் கூறுதற் கேற்றவாறு தன் நற்றாய் இயல்புகளைத் தன்னகத்தே நுண்ணிதில் பொதியப் பெற்றுள்ளது.

அங்ஙனமாயின் தமிழ் எவ்வகை மொழி? எத்தன்மையது? அது தனிமொழியோ? அன்றி வழிமொழியோ? என்ற வினாக்கள் எழும். அது மற்றெம்மொழியின் றுணையும் இம்மியும் வேண்டாது தானே தனித்தியங்கி மிளிரவல்லது. மற்றைய மொழிகளுட் காணப்படாச் சில சீர்களைப் படைத்துள்ளது. பேச்சு வழக்கினும் செய்யுள் வழக்கினும் சிறந்து விளங்குவது. ஆன்றோர் புலனெறி வழக்கி லகன்றுயர்ந்துள்ளது. தெலுங்கு முதலிய தென்மொழிகளுக்கு நற்றாயாவது. அது ஓர் உயர்தனிச் செம்மொழி.

மொழிகள் யாவும் தனிமொழி, வழிமொழி யென்ற இரு பெரும் பிரிவுளடங்குமேனும், மொழிகளின் பிறப்பு நோக்கியும் சேர்க்கை நோக்கியும், அவைகளை வெவ்வேறு இனமொழிகளாகப் பிரிப்பர் மொழிநூ லுணர்ச்சியுடையார். அவ் வினமொழிகளுள்ளும் பல கிளைமொழிகள் காண்பர்.

மொழிகள் யாவும் ஆரிய மொழிகள், ஆரியமல்லா மொழிகளென விருகூற்றுத் தன்மையன என்பர் சிலர். ஆரிய மொழிகள் பல கிளைமொழிகளாய்ப் பிரிவன. ஆரியமல்லா மொழிகளும் பல கிளைப்படுவன.

தமிழ் ஆரிய மொழியா? அன்றி ஆரியமல்லா மொழிக் கணத்தொன்றா? என உசாவினர் பலர். அஃது ஆரிய மொழிக் கூட்டத்து ளொன்றென்பாரும், அதை மறுத்து ஆரியமல்லா மொழிகளு ளொன்றென்பாருமாய் அப்பலரும் தம்முள் மாறு பட்டாராயினர். அது ஆரியமொழி யென்றதில் அமையாது, வடமொழியின் வழிமொழியேயாம் என்று கூறிச் சென்ற வட மொழி மயக்கம் கொண்ட சில அறிஞரும் உண்டு. அது ஆரிய மல்லா மொழிகளு ளொன்றெனக் கண்டாருட் சிலர், அது சித்தி யக் கிளைமொழிக் கூட்டத்துட்படுமென்று கூறிக்களித்தார். வட மொழி வேறு: தமிழ்மொழி வேறு. வடமொழி இலக்கணமும் தமிழ்மொழி இலக்கணமும் வெவ்வேறாம். அவை தம்முள் ஒற் றுமையுடையனவல்ல. வடமொழிச் சொற்கள் பல பிற்காலத்தில் தமிழ்மொழிக்கட் புகுந்தன. அது நோக்கித் தமிழ்மொழி வடமொழியின் வழித்தெனக் கூறத் துணியார் அறிவுடையார். வெவ்வேறு மொழிகள் வழங்கும் மக்கட் கூட்டத்தார் தம்முட் கலக்கநேரின் தத்தம் மொழிகளும் தம்முட் கலப்பது முறையே யாம். வடமொழிச் சொற்கள் தமிழ்மொழிக்கட் புகுந்ததும் உண்டு. அங்ஙனமே தமிழ்ச் சொற்களும் வடமொழியிலேறி யிருத்தலும் உண்டு. வடமொழி பேச்சு வழக்கற்று நிற்பதால் அம்மொழிக்கண் ஏறிய தமிழ்ச்சொற்கள் சிலவாம். நடு நின்றா ராயும் செம்மையுடையாரெல்லாம் 'சிவம்' தமிழரதுடைமை யெனக் காண்பர். 'சிவம்' பண்டை வடமொழிகளிலும் பரவி யிருத்தலைக் காண்க.

தன்மை முன்னிலைப் பெயர்களும், எண்ணுப் பெயர்களும், தமிழ் மொழியிலும் வடமொழியிலும் வெவ்வேறாக இருக்கின் றன. அவை தம்முட் சிறிதும் ஒற்றுமை யுடையனவல்ல. ஆனால் தமிழிலும், அதன் வழிமொழிகளான தெலுங்கு, கன்ன டம், மலையாளம், துளுவம் முதலிய மொழிகளிலும் அப்பெயர் கள் ஒற்றுமையுடையனவாம். தமிழ், வடமொழியின் வேறாத லைப் புலன்வென்ற புலமிக்க ஆசிரியர் சிவஞானமுனிவர் தெள்ளி தில் விளக்கியுள்ளார். அம்முனிவர் பெருந்தகையார் அக்கொள் கையினை நாட்டற்குக் கூறும் காரணங்கள் எவருள்ளத்தையும்

பிணிக்கும் தன்மை வாய்க்கப் பெற்றன. அக்காரணங்களை யொதுக்குதல் எவர்க்கும் எளிதன்று.

'தமிழ்மொழிப் புணர்ச்சிக்கட்படும் செய்கைகளும், குறியீடுகளும், வினைக்குறிப்பு வினைத்தொகை முதலிய சொல்லிலக்கணங்களும், உயர்திணை அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், அகம்புறமென்னும் பொருட்பாகுபாடுகளும், குறிஞ்சி வெட்சி முதலிய திணைப் பாகுபாடுகளும், அவற்றின் பகுதிகளும் இன்னோரன்ன பிறவும் வடமொழியிற் பெறப்படா...' என்று ஆசிரியர் மாதவச் சிவஞானமுனிவர் கூறும் பொருள் பொதிந்த உரை உண்மைகாண விரும்புவார்க் கொப்பமுடிந்ததாகும்.

'தமிழ்' ஆரிய மொழிகளு ளொன்றன்று. சித்தியக் கிளைமொழிகளு ளொன்றுமன்று. சித்தியக்கிளை மொழிகள் பலவும் உயர்தனிச் செம்மொழிகளல்ல. அம்மொழிகளில் 'அறம்' முதலிய விழுப்பொருள்களைச் சுட்டும் சொற்கள் இல; கொலை முதலிய தீவினைகளை யுணர்த்தும் சொற்கள் பல. அத்தகைய மொழியா தமிழ்? தமிழ்மக்கள் அறம்வழிநின்றொழுகும் ஒழுகலாற்றினையுடையார்: ஒழுக்கத்தை உயிரினும் ஓம்புபவர். அறமுணர்த்தும் சொற்களும் எண்ணில: நூல்களும் எண்ணில. இத்தகைய மாண்புமிக்க தமிழ் மொழியினை சித்திய மொழிகளோ டொருங் கெண்ணுதல் எங்ஙனம் பொருந்தும்?

தொடர்பொன்றும் இல்லாத மொழிகளில் ஒத்த ஓசையுடைய சொற்களைக் காணலாம். அச்சொற்களின் பொருள்களும் ஒப்புமை யுடையனவாகவுமிருக்கலாம். அவ்வொப்புமைகள் போலியாம். அத்தகைய சொற்கள் உண்மையிற் றொடர்புடையன வல்லவாதல் நன்னிதி னாராய்வார் காண்பர். அது எவ்வாறெனிற் காட்டுதும். 'இரும்பு', 'அருவி' என்ற செந்தமிழ்ச் சொற்கள் Iron (அயண், பண்டை உரு இரன் என்பர்) River (ரிவர் என்ற ஆங்கிலச்சொற்களுடன் ஓசையானும் பொருளானும் ஒப்புமையுடையன போற் காணப்படுகின்றன. ஆனல் 'இரும்பு' என்ற செந்தமிழ்ச் சொல் 'இரு' என்ற தமிழ்

முதலடிப் பிறந்ததென்றும், அம்முதற்குக் கருமை யென்னும் பொருள் என்றும், கருநிறமுடைய உலோகம் 'இரும்பு' எனக் காரணப்பெயர் பெற்றதென்றும், அம்முதலடியாக இருள், இருட்டு, இரவு, இருந்தை (கரி) முதலிய சொற்கள் பிறந்துள் ளன வென்றும் கூறிக் 'கரும்பொன்' என இரும்புக்கு மற்றொரு பெயர் இருத்தலையும் சுட்டி, இரும்பின் உண்மை வடிவைக் காட்டுவர் செந்தமிழறிஞர். Iron என்ற ஆங்கிலச் சொல்லுக்கு அப்பொருளில்லை யாதல் ஆங்கில அறிஞர் காண்பர். ஆகையால் 'இரும்பு'ம் Iron ம் தொடர்புடையனவல்ல என்பது தெளிவு. 'அருவி' என்ற செந்தமிழ்ச் சொல் 'ஆர்' என்ற முதலடிப் பிறந்ததென்பர் தமிழறிஞர். 'ஆர்த்தல்' ஒலித்தலென்னும் பொருட்டு. River (ரிவர்) என்ற ஆங்கிலச்சொல்லின் முதலுக்கு ஒலித்தல் என்னும் பொருளில்லை. அவைகளுள் யாதொரு பொருட்டொடர்புங் காண்டலரிதாம்.

யாதொரு தொடர்புமில்லாத மொழிகளுள் ஒற்றுமை யுடைய பொருள்கள் பயக்கும் ஓசை யொற்றுமையுடைய சொற் கள் இருக்கலாம். அவ்வொப்புமை காணின் உடனே அச்சொற் களும், அச்சொற்களை யுடைய மொழிகளும் தொடர்புடையன வாதல் 'கண்டோ'மெனக்கூறி யகமகிழ்கின்றார் சிலர். அங்ங னங் கூறுவார்கூறுக. மொழிநூல் வல்லார் அவ்வொப்புமை கொண்டு மொழிகளின் தொடர்பை நாட்டத் துணியார். அஃது அன்றிச் சொற்களின் அப்போலி ஒப்புமை கொண்டு, மொழி களின் தொடர்பு நாட்டத் துணிவரேல் அவர் துணிவு, நீர் வீழ் வண்டின் சுழற்சியில் தமிழெழுத்தொன்றின் வடிவொப்புமை கண்டு அவ்வண்டிற்குத் தமிழெழுத்துப் பயிற்சியுண்டெனத் துணிவார் துணிவோ டொக்கும்.

தொடர்புடைய மொழிகளாயின் அம்மொழிகளின் தன்மை முன்னிலைப் பெயர்களும், எண்ணுப் பெயர்களும், மக்கள் வாழ்க் கைக் கின்றியமையாப் பொருள்களின் பெயர்களும் ஒற்றுமை யுடையனவாதல் இயற்கை. அவ்வொற்றுமைகளுடன் இலக்கண ஒற்றுமையும் அம்மொழிகட்குண்டு. ஒரு மொழி பேசும் மக்

கள் தம்மிடம் விட்டுப் புடைபெயர்ந்து வேற்றுமொழி மக்களுடன் எய்திக் கலக்கத் தலைப்பட்டு, அவருடன்கூடி நெடுங்காலம் வாழ்ந்து, அவ்வேற்றுமொழிக்கணுள்ள சொற்கள் பலவற்றைக் கடன்கொண்டு வழங்கினும், அம்மக்கள் தங்கள் உரிமை மொழியின் தன்மை முன்னிலைப் பெயர்களை யாதல், எண்ணுப் பெயர்களை யாதல் புறக்கணித்து ஒதுக்கி அப்பெயர்களை வேற்றுமொழியனின்று கடன்கொண்டு வழங்கார். ஆதலின் மொழிகளின் தொடர்புக்குக் கட்டளை யாதெனின், மொழிகளுள் தன்மை, முன்னிலை, எண்ணுப் பெயர்கள் ஒற்றுமை யுடைமையே. தமிழ் மொழியினுள்ள அப்பெயர்களுக்கும் ஆரியசித்திய மொழிகளினுள்ள அப்பெயர்களுக்கும் யாதோரியையும் தொடர்புமில்லை. அம்மொழிகளின் இலக்கண அமைதியும் வெவ்வேறாம். ஆகையால் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவம் முதலிய திராவிட நன்மொழிகள் ஓர் தனிக்கூட்டமாவன எனக் கோடலே சிறப்புடைத்து.

(தொடரும்)

---

# புறநானூறும் தமிழர் மாண்பும்

[திரிசிரபுரம், ம. பெரியசாமிப்பிள்ளை]

(உ௨௫-ம் பக்கத் தொடர்ச்சி)

அறன் பயன்குறியாது செய்தலும் ஈகையும் :—அறம் என்பது அறன் என நிற்கும்; னகரம் மகரத்திற்குப் போலி; நிலம்-நிலன் என்பதுபோல. அறம் அறு என்னும் பகுதியடியாகப் பிறந்த பெயர். செய்வன இவை தவிர்வன இவை என வரையறுப்பதே அறம் என்க. ஈகை என்பது ஈ (கொடு) என்னும் வினையடியாகப் பிறந்த தொழிற்பெயர். வறியார்க்குக் கொடுத்தலே ஈகையாம். என்னை ! "வறியார்க்கொன் றீவதே ஈகை" என்பது திருவள்ளுவர் வாய்மொழியாதலின் என்க. பெற்றோர்ப் பேணல், புதல்வர்ப்போற்றல், பிறர்க்குதவி செய்தல் முதலிய

செய்யத்தக்க அறச்செயல்கள் பலவாம். ஆயினும் அறம் (தர்மம்) என்னும் சொல் ஈகை என்னும் பொருளிலேயே பெரிதும் வழங்கப் பெறுகின்றது. ஒப்புரவின்பாற் படும் செயல்கள் பலவற்றுள்ளும் முதன்மையானது இவ்வீகையே. இதனுனே ஆசிரியர் திருவள்ளுவனாரும் 'ஒப்புரவறிதல்' என ஓர் அதிகாரம் கூறிய தனேடமையாது அதனை யடுத்து ஈகையென மற்றோர் அதிகாரமும் கூறியுள்ளார். ஆகலின், ஈகை அறமும் ஒப்புரவும் ஆகும். இத்தகைய சிறப்புவாய்ந்த அறத்தைச் செய்யுங்கால் யாதொரு பயனும் கருதாது செய்தல் வேண்டும்; அறஞ் செய்தல் நமது கடப்பாடு (கடமை) எனக் கொள்ளுதல் வேண்டும். கைம்மாறு அல்லது பயன் குறித்துச் செய்யில் அது வாணிபம்போன்றதாகு மல்லது அறம் ஆகாது. ஆன்றோர் துணிபும் இதுவே. "கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு, என் ஆற்றும் கொல்லோ உலகு" "வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாம், குறியெதிர்ப்பை நீரதுடைத்து" (குறிஎதிர்ப்பை-அளவுகுறித்து வாங்கி அவ்வாங்கியவாறே எதிர்கொடுப்பது) என்பன அரும் பெறல் திருக்குறள் மணிகள்.

உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் ஆய் என்னும் தமிழ் மகனைப்பற்றிக் கூறுங்கால் 'இப்பிறப்பிற் செய்தது மறுபிறப்பிற் குதவும் என்று கருதிப் பொருளை விலையாகக் கொடுத்து அறத்தை வாங்குபவன் (வாணிகன்) ஆய் அல்லன்; சான்றோர் பலரும் சென்ற நல்வழி என்று உலகத்தார் கருத அந்த நற் செய்கையிலே பொருந்தியது அவனது கைவண்மை' என்பதனை,

"இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வாணிகன் ஆஅய் அல்லன்;
பிறருஞ் சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன் றவன்கைவண் மையே." (புறம்-௧௩௪)

எனக் கூறியுள்ளார். இத்தகைய வள்ளன்மையை உடையவன் ஆய் என்னும் தமிழ்மகன் என்றால், அவன் வரையாது ஈயும் கடையெழு வள்ளல்களில் ஒருவனாக எண்ணப்பெற்றது ஒரு வியப்பன்று.

பாரி என்றும் வேள்பாரி என்றும் அழைக்கப்பெறுபவன் மற்றொரு வள்ளல். இவனது மலை பறம்புமலை; நாடு பறம்பு நாடு; இந்நாடு முந்நூறூர்களை உடையது. மேகமானது கைம் மாறு கருதாது மழைபெய்து உலகத்தைப் பாதுகாப்பதைப் போன்று இவ்வள்ளலும் தனது முந்நூறூர்களையும் பரிசிலர்க்கு (இரப்பவர்க்கு) அளித்து அழியாப் பெரும்புகழ் படைத்தவன். முடியுடைவேந்தராகிய சேர சோழ பாண்டியர் மூவருக்கும் இத்தகைய புகழ் கிடைத்திலது. இவ்வள்ளல் ஈகையில் மேகத் துக்கு ஒப்பானவன் என்று கூறவந்த 'புலனழுக்கற்ற அந்த ணாள' னாகிய கபிலர் பெருமான் 'பாரி, பாரி என்று சொல்லி அவனுடைய பல புகழ்களையும் ஏத்தி அவ்வொருவனையே புகழ் வர் செவ்விய நாவையுடைய புலவர்; பாரியாகிய அவ்வொருவ னுமே அல்லன், மாரியும் (மேகமும்) உண்டு இவ்வுலகத்தைப் பாது காத்தற்கு' என்பதனை

"பாரி பாரி என்றுபல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்;
பாரி ஒருவனும் அல்லன்,
மாரியும் உண்டீண் டுலகுபுரப் பதுவே"　　　(புறம் - க0எ)

எனப் பழித்தது போலப் புகழ்ந்து (நிந்தாஸ்துதியாகக்) கூறி யுள்ளார். ஒருகால் மூவேந்தரும் ஒருங்குகூடிப் பாரியை வெல் லக் கருதிப் படைகளுடன் அவன் பறம்புமலையினை முற்றி (சூழ்ந்து) இருந்தனர். இருந்தும் என்! மலையைக் கைப்பற்று தல் எளிதில் கூடவில்லை. இந்த நிலையில், பாரியின் உயிர்த்துணை வரும் 'பொய்யாநாவிற் கபிலனு' மாகிய அப்புலவர் பெருமான் பாரியின் வள்ளன்மையும் வன்மையும் மற்றை மூவேந்தரது எளிமையும் தோன்றப் பாடக்கருதியவர் பறம்பு முற்றியிருந்த மூவேந்தரையும் பார்த்து 'வஞ்சியாது எதிர் நின்று கொல்லும் படையினையுடைய மூவிருங்கூடிப் போர் செய்தீராயினும் பறம்பு கொள்ளுதற்கரிது; முந்நூறூர்களை உடையது குளிர்ந்த நல்ல பறம்பு நாடு; அம்முந்நூறூரும் பரிசிலர் பெற்றனர்; நீயிரும் பாடினிராய் (பரிசிலர்போலப் பாடி) வரின் நுமக்குப் பரிசிலாக

யாமும் பாரியும் உள்ளேம்; அதுவேயன்றி மலையும் உண்டு' என்பதனை,

"கடந்தடு தானை மூவிருங் கூடி
உடன்றனி ராயினும் பறம்புகொளற் கரிதே;
முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு;
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்;
யாமும் பாரியும் உளமே
குன்றும் உண்டுநீர் பாடினிர் வரினே." (புறம் - ௱௧0)

எனப் படிப்போர் உள்ளம் திகைப்பும் வியப்பும் உறுமாறு மொழிந்துள்ளார். இங்ஙனமாகப் பாரி ஈகையில் மிகச்சிறந்தோன் ஆதலினன்றே சைவசமயாச்சாரியராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளும் தமது அருமைத் தேவாரத்தில் "கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரிலை" எனத்திருவாய் மலர்ந்தருளினர். கடையெழுவள்ளல்களில் மேற் கூறிய ஆய், பாரி இவர்களேயன்றி மற்றைக் காரி, ஓரி, நள்ளி, பேகன், அதியமான் ஆகிய ஐவரும் இத்தகைய ஈகையிற் சிறந்தவர்களே. (இவர்கள் வள்ளன்மையைப் புறம்-௧௫அ-ம் செய்யுளினும், சிறுபாணாற்றுப்படை (அடி அ௪-௧௨௨) யினும் காண்க. ஈண்டு உரைப்பிற் பெருகும்.) ஆகலான் தமிழ்மக்கள் அறன் பயன்குறியாது செய்தலினும் வரையாது கொடுத்தலினும் பெருஞ்சிறப் பெய்தியவர் என்பது தெள்ளிதின் புலனாகும்.

தாளாண்மை:—தாளாண்மை தாள் என்னும் பகுதியடியாகப் பிறந்த பெயராம். தாள் - முயற்சி; அதனை ஆளுதல் தாளாண்மை ஆகும். ஆகவே தாளாண்மை என்பதற்கு முயற்சியுடைமை என்பது திரண்டபொருளாம். பிறர்க்குபகாரம் செய்தல், ஈகை ஆகிய இவ்வரும்பெருஞ் செயல்களுக்குப் பொருள் இன்றியமையாத கருவியாகும். அப்பொருளும் நன்முயற்சியாலேயே ஈட்டப் பெறல்வேண்டும். அம் "முயற்சி திருவினை ஆக்கும்." (திரு-செல்வம்) 'எல்லாருக்கும் உதவிசெய்தல் என்னும் மேம்பாடு முயற்சியாகிய உயர்ந்த குணத்தின்கண்ணே நிலைபெற்றது என்பதனைத் "தாளாண்மை என்னும் தகைமைக்கட்

டங்கிற்றே, வேளாண்மை என்னும் செருக்கு" (வேளாண்மை - உபசாரம்) என்னும் திருக்குறளான் அறிக.

இனித் தாளாண்மையாற் பொருள் ஈட்டுதற்குரிய தொழில்கள் பலவற்றுள்ளும் தலை சிறந்தது உழவுத் தொழிலே. இத்தொழில், பொருளை ஈட்டித்தந்து பலர்க்கும் உபகாரம் செய்தற்கு இன்றியமையாததாகலினனன்றே, வேளாண்மை என்றும் வழங்கப் பெறுகின்றது. இதனை அடுத்து நிற்பது வாணிபம். உணவுப்பொருள் விளைத்தலாகிய வேளாண்மைத் தொழில் இன்றெனின் உலகில் வேறு எத் தொழில்நிகழ்ச்சியும் இல்லை. ஆகலான், அரசர் தம்படையால் வெற்றி பெறுவதும் இத்தொழிலின் பயனாலேயே என்றும் உழவுத் தொழிலுக்கு வேண்டிய நீர்நிலை அணை முதலியவற்றை (Reservoir & Anicuts, etc.,) ஆக்குதல் அரசர் கடமை என்றும் கொண்டனர் நமது முந்தையோர்.

வெள்ளைக்குடிநாகனார் என்னும் அறிஞர் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனுக்கு அறவுறுக்குங்கால் 'கூரிய வேலினையுடைய வளவ! இளைய பனைமரத்தினது துண்டுகள்போல வேறுவேறு கிடக்குமாறு யானைக் கூட்டங்களைக் கொன்ற இடமகன்ற போர்க்களத்தின்கண் வருகின்ற படையை எதிர் நின்று பொறுத்து, அது புறங்கொடுத்தலைக்கண்டு ஆரவாரித்து நினதுபோர் செய்யும்படை தரும் வெற்றியும் உழுகின்ற படையாகிய கலப்பை நிலத்திலே ஊன்று சாலிடத்து விளைந்த நெல்லினது பயன்' என்பதனை,

"......................கூர்வேல் வளவ!
வெளிற்றுப் பனந்துணியின் வீற்றுவீற்றுக் கிடப்பக்
களிற்றுக் கணம்பொருத கண்ணகன் பறந்தலை
வருபடை தாங்கிப் பெயர்புறத் தார்த்துப்
பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை
ஊன்று சால் மருங்கின் ஈன்றதன் பயனே"

என வேளாண்மையின் பெருமையை எடுத்துக் கூறினர். குடபுலவியனார் என்னும் புலவர் உழவுத் தொழிலுக்கு வேண்டிய

நீர்நிலைகளைப் பெருக்குதலினாலேயே அரசர் தம்பெயரை இவ்வுலகில் நிலைநாட்டினவராவர் என்பதனை அறிவுறுத்துவான் வேண்டிப் பாண்டியன் நெடுஞ்செழியனை நோக்கிப் 'பெரியோய்! நீரை இன்றியமையாத உடம்பிற்கெல்லாம் உணவு கொடுத்தவர் உயிரைக்கொடுத்தவராவர்; உணவை முதலாக உடைத்து அதனால் உளதாகிய உடம்பு; ஆதலால், உணவென்று சொல்லப்படுவது நிலத்தோடு கூடியநீர் (உழுது பயிர்செய்வதற்கு நிலத்தில் நீர் சேரவேண்டும் என்பது கருத்து); அந்நீரையும் நிலத்தையும் ஒருவழிக் கூட்டினவர் இவ்வுலகத்து உயிரையும் உடம்பையும் படைத்தவராவர்; நெல் முதலியவற்றை விதைத்து மழையை எதிர்பார்த்திருக்கும் வன்புலம் (புன்செய்) இடமகன்றதாயினும் பொருந்தியாளும் அரசனது முயற்சிக்குப் பயன்படாது; ஆதலால், கொல்லும் போரையுடைய செழிய! இதனைக் கடைப்பிடித்து, விரைந்து, நிலங்குழிந்த இடத்தே நீர்நிலை மிகுமாறு தளைத்தோர் (அணைகட்டியவர்) இவ்வுலகத்துத் தம்பெயரை நிலைநிறுத்தினோராவர்; அந்நீரைத் தளையாதார் இவ்வுலகத்துத் தம் பெயரை நிறுத்தாதோர்' என்பதனை,

"........மிகுதியாள!
நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே;
உண்டி முதற்றே உணவின் பிண்டம்;
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே;
நீரும் நிலனும் புணரியோ ரீண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே;
வித்தி வானோக்கும் வன்புலம் கண்ணகன்
வைப்பிற் றாயினும் நண்ணி ஆளும்
இறைவன் தாட்குத வாதே; அதனால்,
அடுபோர்ச் செழிய! இகழாது வல்லே
நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோர், அம்ம இவட்டட் டோரே;
தள்ளா தோரிவட் டள்ளா தோரே." (புறம் - ௧௮)

எனக்கூறினர். ஆகலின். வேளாண்மையின் சிறப்பையும் இன்றியமையாமையையும்பற்றி அரசர்களுக்கும் அறுவுறுத்தியவர் நமது தமிழறிஞர்கள் என்றால் இவர்கள் வேளாண்மையாகிய தாளாண்மையில் எவ்வளவு குறியுடையவர்களா யிருத்தல் வேண்டும்!

இனித் தாளாண்மையில் வேளாண்மையை அடுத்து நிற்பது வாணிபம் என முன்னர்க்கூறப்பட்டது. நமது முன்னேயோர் உள் நாட்டிலேயே யன்றித் "திரைகடலோடியும் திரவியந் தேடிப்" பெரும்பொருள் ஈட்டும் முயற்சி யுடையராயிருந்தனர் என்பதனைச் சிலப்பதிகாரம் முதலிய நூல்களிற் பரக்கக் காணலாம். இவ்வாணிபமும் அறநெறி பிறழாது செய்தல் வேண்டும் என்பது தமிழர் கொள்கை. இதனை "வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப், பிறவும் தமபோற் செயின்" என்னும் திருக்குறளான் அறிக.

மலையமான் திருமுடிக் காரியைப் பாடிய மாறோக்கத்து நப்பசலையார் என்பவர் 'இந்நிலவுலகிற் பிறந்த மக்கள் எல்லாரினும் அறிவில் மாசற்ற அந்தணனாகிய கபிலன் இரந்து செல்லும் மக்கட்கு இனிப்பாடுதற்கு இடனில்லாதவாறு பரந்து புகழ் நிற்பப் பாடினன்; அதனால் சினமிகுந்த சேனையையுடைய வானவன் (சேரன்) மேல் கடலில் பொன்னைத்தரும் மரக்கலத்தைச் செலுத்திய அவ்விடத்து வேறு சில மரக்கலம் போகமாட்டாத அத்தன்மையுடையேம் ஆயினேம்' என்பதனை

"நிலமிசைப் பிறந்த மக்கட் கெல்லாம்
புலனழுக் கற்ற அந்த ணாளன்
இரந்துசெல் மாக்கட் கினியிட னின்றிப்
பரந்திசை நிற்கப் பாடினன்; அதற்கொண்டு
சினமிகு தானை வானவன் குடகடல்
பொலந்தரு நாவாய் ஓட்டிய அவ்வழிப்
பிறர்கலம் செல்கலா தனையேம். ... " (புறம்-கஉசு)

என்று கூறுகின்றார். இதில் உவமையாகவந்த "சினமிகுதானை ......அனையேம்" என்னும் தொடரினால் சேரர் மேல்கடலிற்

சென்று பொன் கொணர்ந்தார் என்றும், அவ்வாறு செய்தலில் அவரின் மேம்பட்டார் இல்லை என்றும் காணக்கிடக்கின்றது. சோழன் கரிகால்பெருவளத்தானின் முன்னோரில் ஒருவன் மரக்கலம் ஊர்ந்து கடலிற்செல்லுகையில் காற்று இயங்காததனால் மரக்கலம் தடைப்பட அதுபோது வளிச்செல்வனை (காற்றை) அழைத்து ஏவல்கொள்ளும் வலியுடையவனாயிருந்தா னென்பது கரிகால்பெருவளத்தானை வெண்ணிக்குயத்தியார் என்பவர் பாடிய

"நளியிரு முந்நீர் நாவா யோட்டி
வளிதொழி லாண்ட உரவோன் மருக" (புறம் - ௬௬)

என்னும் தொடரினால் தெரியவருகின்றது. ஆகலான் கடல் கடந்து வாணிபம் முதலியன செய்தலினும் நமது முன்னோர் முயற்சியுடையராயிருந்தனர் என்பது இனிது விளங்கும் என்க. தாளாண்மையின்பாற்படும் நெய்தற்றொழில், கப்பற் கட்டுதல் முதலியவற்றிலும் சிறந்து விளங்கியவர் தமிழர் என்பதனை இதுவே இடனாகத்தந்துரைத்துக்கொள்க. விரிவஞ்சி விடுப்பன்.

நட்பு:—நட்பு என்பது நள் என்னும் பகுதி யடியாகப் பிறந்த பெயர். நள்—நெருங்கு, கூடு. இக்கூட்டம் மனத்தானும் மொழியானும் மெய்யானும் ஆம். ஒருவனுக்குத் தொடர்புடையாரிடத்து உள்ள அன்பு அப்பழக்கத்தால் பிறரிடத்தும் செல்லும்வழி ஆர்வம் எனப்படும். அவ்வார்வமே நட்பை உண்டாக்குவது. இதனை "அன்பீனும் ஆர்வ முடைமை அதுவீனும், நண்பென்னும் நாடாச் சிறப்பு" என்னும் திருக்குறளானும் அறிக. ஆகவே நட்புச் சுற்றத்தார் மாட்டே யன்றிப் பிறரிடத்தும் செய்யத் தக்கது என்பது ஈண்டே போதரும். சுற்றத்தாரிடை இயல்பாக உண்டாகும் நட்பினும் பிறரிடத்துச் செய்யும் நட்பு நாடாச் சிறப்பினைத் (அளவிறந்த சிறப்பை) தருதலான், நட்பு என்று சிறப்பித்துக் கூறத்தருவது இதுவே. நாடாச் சிறப்பினைத் தருதலானும், எல்லாப் பொருள்களும் உதவிகளும் எய்துதற்கு ஏதுவாகலானும், மக்கள் வாழ்க்கையே ஒருவர்க்கொருவர் உதவி செய்வதைச் சார்ந்து நிற்பதாகலானும் இந்

நட்பு மக்களுக்கு மிகமிக வேண்டப்படுவதொன்ருகும். அதி லும் பண்புடையார் நட்பாயின் மேன்மேலும் பெருகிப் பேரின் பத்தை அளிக்கும் என்பது ஒரு தலை.

"நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு."

"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு."

என்பன அருமைத் திருக்குறள் மணிகள். இந்நட்பினைப் பற் றிய மற்றைச் செய்திகளெல்லாம் திருவள்ளுவர் வாய்மொழி யால் மாண்புற விளக்கப் பெற்றுள்ளன. ஆகலின் இதன் விரிவு ஆண்டே கண்டுணரத்தக்கது

நட்பிற்குக் காரணம் புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சி என்னும் மூன்ருகும். புணர்ச்சி - ஒரு இடத்தாராதல்; பழகுதல் - பல கால் கண்டும் சொல்லாடியும் மருவுதல்; உணர்ச்சி - நட்புடையா ரிருவர்க்கும் ஒத்தமன உணர்ச்சி. இம்மூன்றனுள்ளும் பின்ன தே சிறப்புடையது. இவ்வுணர்ச்சி உளதாயின் மற்றை இரண் டும் வேண்டா; இதுவே நட்பாம் உரிமையைத்தரும்.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்"

என்பது திருக்குறள் உடலுயிர் நீங்கும் உரிமைத்தாய இவ் வுணர்ச்சி ஒத்த நட்பிற்கு எடுத்துக்காட்டாக உரையாசிரியர் பரிமேலழகரால் ஆளப்பெற்றது கோப்பெருஞ்சோழற்கும் பிசி ராந்தையார்க்கும் உள்ள நட்பு.

கோப்பெருஞ்சோழன் பழைய சோழ ராசதானிகளில் ஒன்ருயதும் மிகச் சிறப்புற்றதுமான உறந்தை (உறையூர்) யில் அரசு செலுத்தியவர்; அறநெறி வழாது ஆண்டு வந்தவர்; கல்விகேள்விகளில் மிக்குக் கவிபாடுதலில் வல்லுநராய் விளங்கிய வர்; பல அறிவுரைகளை மக்கட்குப் புகட்டியவர். பிசிராந்தை யார் பாண்டி நாட்டில் உள்ள பிசிர் என்னும் ஊரில் உள்ளவர்;

கல்வி அறிவு நிரம்பியவர் ; மனைவி மக்களுடன் இல்லறத்தைச் சிறப்புற நடாத்தியவர் ; அங்குள்ள அனைவராலும் நன்கு மதிக்கப்பெற்ற ஓர் சிறந்த அறிஞர். இவர்கள் ஒருவரை யொருவர் கண்டுபழகியும் சொல்லாடியும் அறியார் ; எனினும் ஒருவர் பண்புகளை ஒருவர் கேட்டு அறிந்தனர். உள்ள உணர்ச்சி ஒத்தலான் சிறந்த ஆருயிர் நண்பர்களாயினர்.

---

# பழந்தமிழ்

[மாகறல்- கார்த்திகேய முதலியார்.]

(முன் ௨-ம் சிலம்பு ௩௩௫-ம் பக்கத் தொடர்ச்சி)

## வரிவடிவின் விளக்கம்

பழந்தமிழ் மக்கள் முதலிலேயே எழுத்தாணி கொண்டெழுதுதல் கூடாதாகலின், மூங்கின் மடலைச் செவ்வனஞ் செய்து அதனிடத்தே இறகினாலே சித்திர வெழுத்துகள் எழுதி எழுதிப் பழகின பிறகே யெழுத்தாணியால் பனையோலையில் எழுதத் தலைப்பட்டனரெனல் வேண்டும்.

பனையோலையி லெழுதுவதைப் பார்த்து ஆங்கிலர் வியக்கின்றனர் அவர்க்கு அரிதாகலின் என்க.

மடலென்பது மூங்கின் மடலையும் மூங்கிலினமாகிய பனை மடலையும் உணர்த்தும். நெடுங் கணக்கு ஓலைக் கணக்கு முதலிய சொற்கார ண முணரின் முறம்போ லகன்றுள்ள மூங்கின் மடல் அக்காலத்திருந்ததெனப் புலனாகின்றது.

நெடு + கணக்கு = நெடுங் கணக்கு

நெடு = மூங்கில், கணக்கு = நூல், மூங்கின் மடலின்கண்ணே யெழுதப்பட்ட நூலென்பது பொருள். புத்தகமென்பது மயிலிறகால் எழுதப்பட்ட நூலை யுணர்த்தலின் அக்காலத்தில் மயிலிறகினால் எழுதிவந்தன ரென்பது பெறப்படுகின்றது.

'சுட்டுப்போடு புத்தகந் தன்னையே' என்னும் குணவாகடத்தால் புத்தகமென்பது மயிலிறகினை யுணர்த்தல் காண்க. வாகடம் பிடக மென்பதன் மரூஉ.

மூங்கிலும் மயிலும் குறிஞ்சிக் கருப்பொருள். வருணங்களினலெழுதப்பட்டமையின் வருணமென்னுஞ் சொல் எழுத்தினை யுணர்த்திற்று. எழுத்தென்பதற்கும் சித்திரமென்பதே பொருள். சூரியனிடத்து இயல்பாகப் பஞ்சவருணங்களிருக்கின்றமையின், அச்சூரியனை யுணர்த்தும் எல் என்னுஞ் சொல் 'து' என்னும் பெயர் விகுதியோடு சேர்ந்து எலுத்து எளுத்து எழுத்தெனத் திரிந்து சித்திரத்தையும் சித்திரிக்கப்பட்ட வரிவடிவையும் உணர்த்திற்று.

எழுத்துப் புடவை = சித்திரப் புடவை.

ஓலைக் கணக்கரென்பது மாணவரையும் புலவரையும் உணர்த்தி நிற்கும். மூங்கிலின் மடலிலெழுதப்பட்ட நூலினை ஆராய்வாரென்பது பொருள். ஓலைக் கணக்கு + அய்யர் என்பது ஓலைக் கணக்காய ரென்றாய்க் கற்பிக்கும் ஆசிரியரை யுணர்த்திற்று. அய்யர் = ஆசிரியர்: அன்புடன் கற்பிப்போர் என்பது பொருள்.

"கற்றதூஉ மின்றிக் கணக்காயர் பாடத்தால்"
(நாலடியார் - அவையறிதல்: ௪. செ.)

என்பதுள் கணக்காயரென்பது ஓலைக்கணக்காயரென்பதன் முதற்குறை.

முச்சிலிக்கை யென்பது நாணற் சிவலால் எழுதப்பட்ட நில சம்பந்தமான முறி.

முஞ்சி—முச்சி = நாணற் சிவலாலெழுதுவோன்.

முஞ்சி = ஓர் வகை நாணல்.

முச்சி—முச்சிலிக்கை. முஞ்சி—மௌஞ்சி.

பூர்ச பத்திரத்திலும் அக்காலத்தார் எழுதி வந்தனர். போகர் பூசபத்திரமென்பர். மஞ்சணிறமுடையதென்பது பொருள்.

## மயக்கம்

உடனிலை மெய்ம் மயக்க முதலியவற்றின் ஆராய்ச்சியாலும் தமிழ் உலகில் முதல்முத லுண்டான இயற்கை மொழி யென்பது தெளிவாகும்.

[மொழிநூல், இலக்கணவியல் 34—வது பக்கம் பார்க்க.]

மயக்கம் வேறு, கூட்டம் வேறு.

அச்சம் வெட்க முதலியன மயக்கமாகும்.

கன்மலை முதலியன கூட்டமாகும்.

மயக்கம் = இயல்பால் அமைந்த பிரிவில் சொல்லியைபு.

கூட்டம் = செயற்கையால் அமைந்த பிரிவுடைச் சொல்லியைபு.

புள்ளிமயங்கியலெனத் தொல்காப்பியர் கூறியது ஒற்றுமை பற்றி.

## குற்றிய லுகரம்

பழந் தமிழில் குற்றியலுகரம் இல்லாமையால் அதன் பிரிவாகிய பஞ்சத் திராவிடங்களிலும் ஆரியத்திலும் இலதாயிற்று. அது பிற்காலத்தது. இதழ்குவித்தலே அரிது, வல்லினமெய்யின் மேலுகரத்துக்கு இதழ்குவித்தல் அதனினும் அரிதாகலின் செந்தமிழி லுண்டாயிருத்தல் வேண்டும். இனிக் குற்றியலுகர மொழியெனின் வல்லின மெய்யீற்று மொழியெனக் கொள்ளல் வேண்டும். இவ்வாராய்ச்சியிலும் 'தமிழ்' உலகத்து முதன் மொழி யென்பது பெறப்படும்.

தமிழில் இதழ் பொருந்தும் உச்சரிப்பு மிகுதி.

மற்றைய பாஷைகளில் இதழ் பொருந்தாத உச்சரிப்பு மிகுதி.

(தொடரும்)

திருநெல்வேலி ஜில்லாப் போர்ட் தலைவராகிய

திருவாளர். S. குமாரசாமி ரெட்டியாரவர்கட்கு

அரசினரால் அளிக்கப்பெற்ற

'திவான் பகதூர்ப்' பட்டச் சிறப்புப் பாராட்டாக

அவர்கள் செயல் வியந்தளித்த

# வாழ்த்துப் பாக்கள்

[பு. சி. புன்னைவன நாதன்]

அறுசீர்க்கழிநெடிலாசிரியம்

பொன்னுலகும் புகழ்வளங்கள் பொருந்துமெழில் இங்கிலாந்திற்
　　பொருந்தி இங்கு
மன்னுயிரும் தன்னுயிர்போல் மாண்பினினி துறப்புரக்கும்
　　மன்னர் மன்னன்
நன்னர்பல நலமுடையன் நாகரிகச் சிறப்பன்
　　நளினப் போதார்
மின்னருள்நல் வலியுடையன் மேதகும்ஐந் தாம்ஜார்ஜநம்
　　மேரி நாதன்.　　௧

ஆழியுல கிலகுமுயிர் அனைத்துமுயர் அறநெறியில்
　　அன்பால் அன்றிப்
பாழியதிண் டோள்வலியாற் படைவலியால் இன்புறநாம்
　　பார்த்தல் இல்லென்
ஏழியல்எட் வர்டமைதி இறைவனுரை இருநிலத்தில்
　　இயங்கச் செய்சீர்
வாழியநம் ஜார்ஜரசன் வளரறுப தாண்டடைந்தான்
　　வளர்க செங்கோல்.　　௨

தருமநெறி பிறழாது சகலஜனங் களும்நலமே
　　சாரச் செய்நம்
பெருமனதார் விக்டோரி யாபேரன் பெட்புறுதன்
　　குணனொழுக்கம்

அருமையுறப் பெற்றார்க்கும் அரியதிருத் தொண்டாற்றும்
அன்பர் ஊக்கம்
பெருமையுறப் பட்டமளித் துயர்த்திடுநற் பெருவழக்கம்
பேசப் போமோ! ௩

மாகாண வளநெறியின் மதியமைச்ச! சிவஞான
மன்ன! நின்பின்
வாகான செயலுஞற்று வழக்கறிஞன் தமிழன்பன்
வளர்சை வத்தும்
பாகான ரசமுணர்வன் பகரிந்து கல்லூரி
பண்பின் ஓங்கற்
கேகாணு நெறியமைச்சன் கேடிலிரு செல்வனிசை
கெழுமு நண்பன். ௪

நாற்றிசைசொல் போர்ட்தலைவன் நடுப்பள்ளி யவைத்தலைவன்
நண்ணுருஞ்சீர்
போற்றுநல வாலிபசா ரணசங்கப் பொறுப்பிறைவன்
புகழ்நம் சென்னை
தோற்றுமிள மக்களுயர் பட்டமுறச் செய்செனட்டும்
பொருந்து தோன்றல்
ஏற்றவெலாம் செய்குமார சாமிரெட்டி எனும்பேரோ
டெழிலுற் றேனே. ௫

பன்னுதிவான் பகதுரெனும் பட்டமிறை பிறந்தநாட்
பெற்ற நின்போல்
மன்னினனிவ் யாண்டிந்த மகிழ்ச்சியுரை காஸ்மாப்
பாலிட்டன் வண்ணை
துன்னியபே ரவைத்தலைமை யுறுசிவஞா னச்செம்மால்!
துலங்கு நின்சீர்
பின்னிவனும் அடைதல்முறை பெரிதெனும்பூ தலத்தருரை
பிழையா தன்றே. ௬

எல்லொளி மழுங்கா தோங்கும்
இடமெலாம் ஆட்சி செய்ய

வல்லநம் ஜார்ஜ் செங்கோல்
வளமுடன் வாழி மன்னன்
சொல்லுறு குடிகள் வாழி
தோன்றுநெல் வேலி வாழி
நல்லநம் குமார சாமி
நலமுடன் நாளும் வாழி. எ

---

# திருநெல்வேலி ஜில்லாச் சிவாலய சாத்திர பாடசாலை தாபனம்

சிவாலயங்களெல்லாம் சைவ சமயிகளுக்குத் தெய்வ பக்தியையும் சிவஞானத்தையும் வளர்ப்பிக்கும் புண்ணிய தலங்களாகும். அத்தலங்கள் தற்காலம் இயல்புமாறி மிகவும் பரிதாபமான நிலைமையிலிருக்கின்றன வென்பது அனைவரும் அறிந்த தொன்றாகும். ஆலயத்திற் கைங்கரியஞ் செய்யும் ஆதிசைவர்களும் ஓதுவார் முதலியோர்களும் சைவ சமய உண்மையை நன்கு அறிந்து ஒழுகுவார்களாயின் சிவாலயங்கள் இவ்வித நிலை மாறுபாட்டிற்கு வந்திராவென்பது திண்ணம்.

ஆகையால் ஆதிசைவர் ஓதுவார் முதலியவர்களுக்குச் சைவ சமய வுண்மையை விளக்கும் கலாசாலை ஒன்று ஏற்படுத்துதல் மிகவும் இன்றியமையாதது. அக்கலாசாலையில் அவர்களுக்குச் சிவாகமங்களும், சைவத் திருமுறைகளும், சிவஞான போத முதலிய சித்தாந்த சாத்திரங்களும், அவற்றிற்கு வேண்டுங் கருவி நூல்களும் கற்பிக்கப்படல் வேண்டும். இக்கலாசாலையில் கற்றுத் தேறியவர்களே சிவாலய கைங்கரியங்களைச் செய்வார்களாயின் சைவ சமயிகள் சிவாலயத்தா லாம் பயனை உள்ளவாறு பெறுவார்கள்.

இவ்வுண்மையைத் திருநெல்வேலிச் சிவ கமிட்டியாரில் ஒருவரும், சேரன்மாதேவி தாலூகா போர்டு தலைவரும், சைவ சாத்திர விற்பன்னருமாகிய அம்பாசமுத்திரம் வக்கீல் திருவாளர்

V. P. காந்திமதிநாத பிள்ளை, B.A. அவர்கள், உணர்ந்து தமது சிரமத்தைச் சிறிதும் பாராட்டாது தாமே நேரில் ஒவ்வொரு தேவஸ்தானத்து அறத்தலைவர் (தரும கருத்தர்)களிடமுஞ் சென்று, அந்தந்த தேவஸ்தான வரும்படியில் ஒருபாகம் ஷை பாடசாலை ஏற்படுத்துதற்கென்று தேவஸ்தான வரவு செலவு திட்ட மசோதா (Budget)வில் ஏற்படுத்தும்படி வேண்டும் முயற்சிகள் செய்து வருவதாகத் தெரிந்து மகிழ்கிறோம். திருச்செந்தூர் தேவஸ்தான அறத்தலைவர்களும், திருநேல்வேலி தேவஸ்தான அறத்தலைவர்களும் மேற்குறித்த ஏற்பாட்டை மிக்க அன்புடன் ஆதரித்து தேவஸ்தானங்களின் வருவாய்க்குத் தகுந்த பெருந்தொகை வரவு செலவு மசோதாவில் திட்டஞ் செய்திருக்கிறார்களென்பதும் கேள்விப்பட்டு மகிழ்கிறோம்.

மற்றைய தேவஸ்தான அறத்தலைவர்களும் இவ்வுத்தம சிவ புண்ணியத்தைப் பின்பற்றித் தங்கள் தங்கள் தேவஸ்தானத்தின் வரும்படிக்குத் தக்க பெருந்தொகை உதவி செய்தும், சிவ கமிட்டியார்கள் தேவஸ்தான அறத்தலைவர்கள் செய்தனுப்பும் திட்ட மசோதாவை ஆதரித்தும், சேன்ற்ரல் போர்டார் அங்கிகரித்தும் ஷை சிவபுண்ணியத்தை நடத்திச் சிவபெருமானுடைய திருவருளுக்கு உரியவராகும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கத்தார்.

---

# தென்னிந்திய தமிழ்ச் சங்கம்,

## திருநெல்வேலி

[செல்வி ௬-ம் இதழில் இச்சங்கத்தினால் நடத்தப்படும் பரீக்ஷைகளின் விவரமும், நடத்தப்படும் இடங்களின் பெயர்களும், பரீக்ஷை விதியும், பரிசு விவரமும் வெளிவந்துள்ளன. இவ்விதழில் முதலாவதாயுள்ள தமிழ்த்தேர்வுப் பரீக்ஷைக்குள்ள பாடங்கள் மட்டும் வெளிவருகின்றன. அடுத்த இதழில் இளந்தமிழ்ப்புலவர்க்குரிய பரீக்ஷைகளுக்குள்ள பாட விவரங்கள் வெளிவரும்.]

## தமிழ்த்தேர்வு

I நீதிநூல்

(1) திருக்குறள் :-கடவுள் வாழ்த்து, அன்பு, ஒழுக்கம், வாய்மை, கல்வி, நட்பு.

(2) நாலடியார் :-அறத்துப்பால். (கழகப் பதிப்பு.)

(3) சோமேசர் முதுமொழி வெண்பா. (கழகப் பதிப்பு.)

II சிறுகாப்பியம்

(1) நளவெண்பா :-கலிநீங்கு காண்டம். (கழகப் பதிப்பு.)

(2) நால்வர் நான்மணிமாலை.

(3) இளையைப் பதிற்றுப்பத்தந்தாதி. (கழகப் பதிப்பு.)

(4) பிள்ளைத் தமிழ்க் கோவை (செய்யுட் பாடக் கோவை தொள்ளாயிரத்தில்) புன்னைவன நாத முதலியார்.

(5) அருணைக் கலம்பகம். (கழகப் பதிப்பு.)

(6) திருவேங்கடமாலை.

III பெருங்காப்பியம்

(1) பாரதம் :-(வில்லிபுத்தூரர்) கன்ன பருவம்.

(2) திருவிளையாடற் புராணம் :-தடாதகை திருமணப் படலம்.

(3) பிரபுலிங்கலீலை :-மாயை பூசனைகதி, பிரபு தேவர் வந்த கதி,

IV சமயநூல்

(1) தேவாரம் :-திருப்பாண்டிக் கொடுமுடி, மற்றுப் பற்று (சுந்தரர்) கோளறுபதிகம் (சம்பந்தர்) திருப்பூவணம், திருவதிகை வீரட்டானம், திருவடித் திருத்தாண்டகம். (திருநாவுக்கரசு.)

(2) திருவாசகம் :-குயிற்பத்து, பிடித்த பத்து, அருட்பத்து, எண்ணப்பதிகம்.

(3) குலசேகர ஆழ்வார் பதிகம் :-பெருமாள் திருமொழி 9-வது 10-வது திருமொழிகள், தனையன் கான்புகத் தசரதன் புலம்பல், தில்லை நகர்த் திருச்சித்திர கூடமால் தொல்விராமனுய்த் தோன்றிய கதை முறை.

V இலக்கணம் :

நன்னூற் காண்டிகை :-(நாவலர்)

யாப்பணி இலக்கணம் :-(விசாகப் பெருமாளையர்)

VI வசனம்.

பெரிய புராண வசனம் :- ஆறுமுக நாவலர்

பஞ்ச தந்திரம் :-நட்புப்பேறு, ஆராயாது செயல்.

தமிழ் வரலாறு :-சூரியநாராயண சாஸ்திரியார்.

அறிவுரைக்கொத்து :-வேதாசல சுவாமிகள்.

VII வியாசம்: மேற்குறித்த பாடப் பொருள்கள் குறித்து.

## குறிப்பு

தண்டமிழ்த் தாய்க்குத் தொண்டு பூண்டொழுகுபவரும், தமிழ்த் தாயி னருந்தவப் புதல்வருமாகிய திருவாளர் பா.வே.மாணிக்கநாயக்கரவர்கள் மேனிலைப் பொறிவலாளர் (Superintending Engineer) என்னும் நிலையில் உறுதி செய்யப்பட்டுள்ள செய்தியை யறிந்து அளவிலா மகிழ்ச்சி யடைந்தோம். இப்பெரியாரது தன்மையினை உணர்ந்து செய்த அரசாங்கத்தினருக்கு வந்தன மளிக்கின்றோம். இப்பெரியார்க்கு உடல் வலிவும், உளவலிவும் குறையாமல் நீண்ட ஆயுளையு மளிக்குமாறு இறைவனை வழுத்துகின்றோம்.

---

## மதிப்புரை

காரியசித்தியின் இரகசியம் :—இந்நூல் இயற்றியவர் ச. கந்தசாமி முதலியாராவர். இஃதோர் அருமையான உரைநடை நூல். இது பெரிதும் மாணவர்க்குப் பயன்றரத்தக்கது. சுவாமி இராமதீர்த்தா அவர்கள் ஆங்கிலத்தில் அமெரிக்காவிலும் ஜெப்பானிலும் செய்த இரு சொற்பொழிவுகளை மொழிபெயர்த்ததாகும் இந்நூல். இதில் எழு இரகசியங்களடங்கியிருக்கின்றன. அவ்விரகசியங்களை விளக்குவதற்கு மேற்கோள்களாகச் சில பெரியார்களது அநுபவங்கள் எடுத்துக் காட்டப்பட்டிருகின்றன. இதன் விலை அணா 3. கிடைக்குமிடம் :— அம்பாவிலாச புத்தகசாலை, கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

நல்லைச் சண்முகமாலை :—இஃது ஓர் அருமையான தோத்திர நூல். இந்நூலை யியற்றியவர் வண்ணைநகர் செ. வெ. செல்லையா என்பவர். செய்யுட்களெல்லாம் தெளிவாயும், உருக்கமாயு மிருக்கின்றன. கிடைக்குமிடம் :—தையல்நாயகி யச்சயந்திரசாலை, யாழ்ப்பாணம்.

இராமகிருஷ்ண விஜயம் :—மைலாப்பூர் இராம கிருஷ்ணமடத்தி லிருந்து இத்திங்கள் வெளியீடு இரண்டு திங்களாக வெளிவராமலிருந்து இப்பொழுது வெளிவருகின்றது. இனித்திங்கள்தோறும் வெளிவருமென்று அறிந்து மகிழ்ச்சியடைந்தோம்.

---

Printed by Sivakami Vilasam Press : Published by V. Subbiah
for The S. I. S. S. W. P. Society, Ltd., Madras.

நமது நூற்பதிப்புக் கழகத்தினின்றும்
நாளது ஜூன்மீ வெளிவந்துள்ள

# அரிய நூல்கள்

---

**குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு,**

இதில் கந்தர்கலிவெண்பாமுதல் கைலைக்கலம்பகம் வரை 15 நூல்கள் உள்ளன. கைலைக்கலம்பகம்மட்டும் இதுவரை வெளிவாராதது) அரும்பொருள் விளக்க உரையினை இறுதியில் 237 பக்கங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சமய அறிவைப் பெற விரும்புவாரும், தமிழப்புலமை யடைய விரும்புவாரும் வாங்கிக் கற்கக்கூடிய ஓர் அருமை நூலாகும். ஷை சுவாமிகளின் திருவுருவப்படத்துடன் வழுவழுப்பான உயர்ந்தசீமைக்கடிதத்தில் 656 பக்கங்கள் உள்ளது; அழகிய முழுக்காலிக்காக் கட்டிடம் பொன் கிலிட்டுடன். விலை ரூபா 3 8

**அரதத்தாசாரியர் அருளிய வடமொழிச் சுருதி சூக்தி மாலை** (நாகர லிபியில்) வியாக்கியானத்துடனும், தமிழ் மொழிபெயர்ப்புடனும் வழுவழுப்பான உயர்ந்த சீமைக் கடிதத்தில் 400 பக்கங்கள் உள்ளது; அழகிய முழுக்கலிக்காக் கட்டிடம் பொன்கிலிட்டுடன். விலை ரூபா 3

**அகத்தியர் தேவாரத்திரட்டு மூலம்.**

திரு. கயப்பாக்கம் சதாசிவச் செட்டியாரவர்களால் எழுதப்பட்ட பதவுரை, விளக்கவுரையுடன் வழுவழுப்பான உயர்ந்த சீமைக் கடிதத்தில் 384 பக்கங்கள் உள்ளது; அழகிய காலிக்கா கட்டிடம் பொன் கிலிட்டுடன். விலை ரூபா 1 12

**அரதத்தாசாரியர் அற்புத சரித்திரம்** அணா 4

**ஆத்திசூடி மூலம்** பதவுரை விளக்கவுரையுடன் அணா 2

**கொன்றைவேந்தன் மூலமும்** பதவுரை விளக்கவுரையும் (மேற்கூறிய உரை இரண்டும் திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் இயற்றியது) அணா 2

**திருஞானசம்பந்தர் தேவாரம் இயற்கைப் பொருளழகு** (திரு. கா. சுப்பிரமணியபிள்ளையவர்கள் இயற்றியது) அ. 4

**திருவாசக மூலம்**

(அழகிய பாக்கட் பதிப்பு வெளிவந்துவிட்டது.) மேற்கூறியவற்றுட் சில கொஞ்சப் பிரதிகளே அச்சிட்டிருப்பதால் வேண்டுவோர் விரைந்து பெற்றுக்கொள்ளுதல் நலம்.

நமது கழகத்திலிருந்து சென்ற ஜூலையீ வெளிவந்த

# அழகிய தமிழ்ப் புத்தகங்கள்

(முன் பக்கத் தொடர்ச்சி)

## தோத்திரம்

**திருவாசகம்** மூலமும் குறிப்புரையும்

ரீனஸ் கடிதப் பதிப்பு நடராஜர், மாணிக்கவாசகர் உபதேசப் படங்களுடன் அழகிய காலிக்கா கட்டிடம் பொன் லிலிட்டுடன் (பாக்கட்) விலை ரூ. 1 8

**ஷை** (உயர்ந்த பதிப்பு)

விலையுயர்ந்த (Featherweight) கடிதத்தில் ரெக்சின் (Rexin) துணியில் பஞ்சு வைத்துக் கண்ணைக்கவரும் வண்ணம் பொன் லிலிட்டுடன் கட்டடஞ் செய்யப்பட்டது (பாக்கட்) ரூ. 3 0

## பதினெண் கீழ்க்கணக்கு

**கார் நாற்பது** மூலமும் உரையும்

உரையாசிரியர் திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர், திரு ந. மு. வேங்கடசாமிநாட்டாரவர்கள்.
ரூ. 0 5

**நானாற்பது** உரையுடன்

கார்நாற்பது, களவழி நாற்பது, இன்னாநாற்பது, இனியவை நாற்பது இவை நான்கும் உரையுடன் விலையுயர்ந்த கடிதத்தில் காலிக்கா கட்டடஞ் செய்யப்பட்டது. ரூ. 1 8

## சமயதத்துவ தருக்க நூல்

**சைவப்பிரகாசனம்** (ஓர் அரிய வசன நூல்)

இந் நூலாசிரியர் நீர்வேலி, வித்துவசிகாமணி - சிவ. சங்கர பண்டிதர். இந்நூல் சைவ ஞானசாத்திரங்களை அறிதற்கு இன்றியமையாது வேண்டப்படும் தருக்க அறிவையும் அதனை உபயோகிக்கும் முறையையும் நன்கு விளக்குவது. இதன் பொருளடக்கம்:—இலக்கணம், பிரமாணம், சுருதிநிருபணம், சமய நிருபணம், சைவச் சுருதி நிருபணம், சைவ சமய நிருபணம். (காலிக்கா கட்டடம்)
ரூ. 1 0

குறிப்பு:—இன்னும் பல நூல்கள் அச்சில். அவை வெளிவந்தவுடன் அவ்வப்போது தெரிவிக்கப்படும்.

---

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
306, லிங்கசெட்டித் தெருவு, சென்னை